ISSN: 2012 - 6352
Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி



MERCIFUL LIKE THE FATHER

ஜூன் - 2016

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜுன் - 2016

மலர் - 48 இதழ் - 05

**ஆசிரியர்**

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| சமய வெறி பிடித்த | 02 |
| சமயோசிதமும் மதிநுட்ப | 04 |
| உன்னில் மனிதம் மலர | 05 |
| மாணவர் பக்கம் | 06 |
| புனித அந்தோனியாரே | 07 |
| குறுங்கதை | 08 |
| இறை இரக்கம் | 09 |
| விடியல் தோன்றும் | 11 |
| நன்றியுடன் நினை | 12 |
| மருத்துவம் | 14 |
| திருத்தந்தை ஆற்றிய | 15 |
| எல்லாமே தோற்று | 16 |
| உலகெங்கும் மரியாள் | 18 |
| சின்ன விசயங்கள் சிறந்த | 19 |
| இதுதான் அரசியல் | 20 |
| கத்தோலிக்கத் திருமறை | 22 |
| புனிதர்களை அறிவோம் | 23 |
| எண்ணிப்பார்க்கையில் | 24 |
| கூட்டுப் புழுவும் வண்ணததுப் | 25 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com



விலை : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....!



அன்பு மிக்க சகோதரங்களே!

இம் மாதம் தொண்டன் வாசகர்களாகிய உங்கள் அனைவர் மேலும் புனித அந்தோனியாரின் அருளும், ஆசீர்வாதமும் நிரம்புவதாக!

பதுவைப் புனிதர்
புனித அந்தோனியார்
அற்புதர் கோடி அற்புதர்
மீன்களுக்கு நற்செய்தி
புகட்டிய போதகர்
கழுதையை மண்டியிட்டு
நற்கருணையை வணங்கச் செய்த
கடவுளின் ஊழியன்
நஞ்சைக் குடித்தாலும் தீங்கு
இல்லையே என்ற வேதாகம
வார்த்தையை உயிருள்ளதாக்கியவர்
நம் புனிதர் பதுவைப் புனிதர்
புனித அந்தோனி முனீந்திரர்

நம் வாழ்வில் மனப் போராட்டங்களோடும், பசாசுகளின் தந்திரங்களாலும் கடன் கஸ்டங்களோடும் போராடும் நெஞ்சங்களை உடனிருந்து பாதுகாக்கும் லீலி புஷ்பமாகவும், விலை மதிக்கப் பெறாத மாணிக்கமாகவும், பரலோக, பூலோகக் காவலராகவும் விளங்கும் புனித அந்தோனியார் நம்மைக் காக்க வல்லவராக இருக்கின்றார்.

புனித அந்தோனியார் வாழும்போது மட்டுமல்ல அவர் இறந்த போதும் பல புதுமைகளைச் செய்தார். அவருடைய புதுமைகளைப் பார்த்த திருச்சபை ஒரே ஆண்டிலேயே அவருக்குப் புதுமைப் பட்டம் வழங்கியது. அப்படிப்பட்ட புனித அந்தோனியாரை நீங்கள் நாடித் தேடும்போது அவரது சுரூபத்தையோ அல்லது படங்களைப் பார்க்கும்போது இரண்டு ஒற்றுமைகளைப் பார்ப்பீர்கள்.

1. புனித அந்தோனியார் கையில் இருக்கும் குழந்தை இயேசு

புனித அந்தோனியார் தன் நண்பன் திரேசு என்பவருடைய வீட்டில் ஜெபித்துக்கொண்டு இருக்கும்போது குழந்தை இயேசு அவருக்குத் தோன்றி அவருடன் விளையாடிக் கொண்டிருந்தார்.

2. அவர் கையில் உள்ள லில்லி மலர்

1680ம் வருடம் ஆஸ்திரியா நாட்டில் உள்ள கோவிலில் அவரது திருநாள் அன்று ஒரு நபர் லில்லி மலரை அந்தோனியார் சுரூபத்தில் வைத்துவிட்டுச் சென்றார். கொஞ்சநாள் கழித்து அந்த லில்லி மலர் வாடாமல் இரண்டு புதிய பூக்களாகப் பூத்திருந்தன. இப்படிப்பட்ட புதுமைகளைச் செய்யும் புனிதர் உங்களுடைய வாழ்க் கையிலும் ஆண்டவரிடம் பரிந்து பேசி அற்பு தங்கள் பல செய்ய வல்லவராக இருக்கின்றார்.

புனித அந்தோனியார் சிறு வயதிலேயே புதுமை செய்யும் வரம் பெற்றிருந்தார். ஒருநாள் அவருக்குக் கோவிலுக்குச் சென்று திவ்விய பலி பூசை காண வேண்டும் என்று ஆசை. ஆனால், அவரது தந்தை வீட்டுத் தோட்டத்திலுள்ள தானியங்களைப் பறவைகள் சாப்பிடாமல் காவல் காக்குமாறு பணித்தார். ஒரு பக்கம் திவ்விய பலி பூசை காண ஆசை. மறுபக்கம் அப்பாவின் வேண்டுகோள். இதை எண்ணி ஆண்டவரிடம் இரந்து மன்றாடினார். ஆண்டவர் மனமிரங்கினார். புனித அந்தோனியார் பறவைகளைப் பார்த்து அரண்மனைக்குள் செல்லக் கட்டளையிட்டார். பறவைகள் அரண் மனைக்குள் சென்றன. திவ்விய பலி பூசை கண்டபின் வீடு வந்த புனித அந்தோனியார் அரண்மனைக்குள் இருந்த பறவைகளை வெளியே வரக் கட்டளையிட்டார். பறவைகள் வெளியேறின. இவ்வாறு சிறுவயது முதல் ஆண்டவரிடம் பரிந்து பேசும் பரிந்துரையாளராக புனித அந்தோனியார் விளங்கினார்.

இத்தகைய அற்புதங்களைச் செய்துகொண்டிருக்கும் புனித அந்தோனியாரின் புதுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இந்தப் புனிதர் பெருவிழா ஜூன் 13ம் நாள் கொண்டாடப்பட இருக்கின்றது. அவரிடத்தில் நாடித் தேடி நம் மன்றான்டுக்களை, செபங்களை, நம் தேவைகளைச் செபித்து அவரது அருளையும், ஆசீரையும் பெற்றுக் கொள்வோம். எல்லோருடைய வீடுகளிலும் ஆண்டவரின் ஆசீர் தங்கட்டும்.

- ஆசிரியர் -

இறைவாக்கு

"எனக்கு அன்பு காட்டுவோர்க்கு நானும் அன்பு காட்டுவேன்: என்னை ஆவலோடு தேடுகின்றவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள்" (நீ.மொ. 8:17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வெறி பிடித்த அரசியல்வாதிகளையும் தலைவர்களையும் புறந்தள்ளவேண்டும்

-மட்டு -அம்பாறை மறை மாவட்ட ஆயர்-



30.04.2016
அன்று சனிக்கிழமை மாலை சமாதானத்திற்கான இலங்கை சமயங்களின் பேரவையின் வருடாந்த ஒன்று கூடல் பெருவிழா மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சாரதா தேவி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வானது சமாதானத்திற்கான இலங்கை சமயங்களின் பேரவையின் தலைவர் சுவாமி ஸ்ரீமத் பிரவு பிரபாணந்தஜி மகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு-அம்பாறை மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை, ஜனாப் முகமது ஹனீபா, முகமது புஹாரி உட்பட மதத்தலைவர்கள், அருட்சகோதரர்கள், பல சமயங்களின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு மதங்களைக் கொண்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மதங்களுக்கிடையில் மனித நேயத்தினை உருவாக்கி வன்முறையற்ற சமூகத்தினை கட்டியெழுப்பும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின்போது மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் மதத்தலைவர்களுக்கிடையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இங்கு உரையாற்றிய ஆயர், “சமயத்தின் பெயரால் எத்தனை கொடூரங்கள், வன்முறை நிகழ்வுகள் உலகின் பல பாகங்களிலும் அரங்கேறி வருகின்றன. சமய நல்லிணக்கமும், சகிப்புத் தன்மையும் கற்பூரம்போல் கரைந்து வருவது வேதனையளிக்கின்றது. சமய வன்முறைகளும், கலவரங்களும் தற்போது மட்டுமல்லாது வரலாற்றின் பல்வேறு காலகட்டத்திலும் நடைபெற்றுள்ளன. சமயத்தின் சமை என்பது சமைத்தல் என்பதன் பொருள்படும். உணவுப் பொருட்களை உண்பதற்கு ஏற்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவப்படுத்துவதே சமைத்தலாகும். அதுபோலவே மனிதர்களை நல்ல நெறியில் ஒழுகச் செய்வதற்காக அவர்களை வாழ்வில் பக்குவப்படுத்துவ்தும் செம்மைப்படுத்துவதுமே சமயம் ஆகும். அனைவரையும் ஒன்றிணைப்பதும் சமயங்களின் நோக்கமாகக் கொள்ளப்படுகின் றது.


சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் வழிபாட்டு முறைகளையும் நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதைக் கடந்து மனிதனை இறைவனோடு உறவுகொள்ளச்செய்து அவர்களின் இதயங்களில் இருக்கும் தீமைகளைக் களைந்து இறை தன்மை யினை அவர்களிடம் நிலைபெறச் செய்யும் ஒரு அருள்கருவியாகச் சமயங்கள் விளங்கவேண்டும். இறைவனின் மலரடியைத் தொழுவது மட்டும் சமயம் அல்ல, மனித நேயத்தினைப் போற்றுபவர்க ளாகவும் விளங்க வேண்டும். உண்மையான சமயவாதிகள் உலகில் உள்ள அனைத்து மனிதர்களையும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி நேசிப்ப வர்கள். வள்ளலார் இராமலிங்கம் அடிகளார், தாயுமானவர் ஆகியோர் அனைவரையும் ஒன்றிணைத்த சமயவாதிகள். இயேசுவும் அதனையே கூறியுள்ளார். இஸ்லாம் என்றால் அது அமைதி மார்க்கமாகும். அதன் அடிப்படைக் கோட்பா டான ஈமான் நம்பிக்கை கொண்டு மற்றவர்களுக்கு உதவும் நோக்கத்தினைக் கொண்டது. மற்றவர்களின் அமைதிக்காகப் பிரார்த்தனை செய்வதும் இஸ்லாத்தின் நோக்கமாக இருக்கின்றது. இவ்வாறான நிலையிலேயே சமய நல்லிணக்கத்தை நாங்கள் வலியுறுத்துகின்றோம். அனைத்து மதங்களிலும் சில பொதுமைகள் இருக்கின்றன. அதனை நாங்கள் முதன்மைப்படுத்த வேண்டும். மனித இனத்தைச் சேர்ந்தவர் களே அனைவருமாகும். அனைத்து மதங்களும் அன்பையே வலியுறுத்துகின் றன. மனித நேயத்தின் அடிப்படையில் மற்றவர்களை மதிக்க மதங்கள் கற்றுக்கொடுக் கின்றன. உண்மை, நேர்மை, சமத்துவ விழுமியங்களை, சகோதரத்துவத்தினை அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன. அனைத்து மதங்களும் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைப்புக் காட்டுகின்றன. பல்சமயத்தின் நல்லிணக்கத் தேவையினை நாங்கள் வலியுறுத்துகின்றோம். அனைத்து மதத்தினராகிய நாங்கள் இணைந்து சமய நல்லிணக் கத்தை வலியுறுத்துகின்றோம். மக்களிடையே பிரிவினைகள் ஏற்படாமல் இருக்கப் பிளவுகளைத் தடுக்க வேண்டும். மதக் கலவரங்கள், மோதல்கள் நிகழாமல் இருக்க வேண்டும். சமூகத்தில் அமைதி தேவையென்றால் பிற மதத்தவர் களுடன் ஒற்றுமையுணர்வினை வளர்க்க வேண்டும். சகிப்புத் தன்மையுடன், சமூக உணர்வு டன் வாழவேண்டும். பிற மதங்க ளில் உள்ள கோட்பாடுகளை நாங்கள் அறிய முற்பட வேண்டும். இந்த நாட்டில் நான்கு மதங்கள் உள்ளன. வேற்றுமையில் ஒற்றுமை பாராட்டுவதே இந்த நாட்டுக்கு இறைவன் விடுக்கும் அழைப்பா கும். அனைவரும் எமது சகோதரர்கள், நண்பர்கள் என்று கைகோர்க்கும் நாள் ஒன்று வர வேண்டும். பலர் சமய வேறுபாடு களை ஊதிப் பெரிதுபடுத்திச் சமயத்தின் பெயரினால் பிளவு களை ஏற்படுத்தும் பாசிச போக்கு ஒழிய வேண்டும். இந்து-முஸ்லிம் மக்களுக்கு இடையே ஒற்றுமையினை ஏற்படுத்தியதன் காரணமாகவே மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். சமய நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டவரின் நிலைமை அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சமய நல்லிணக்கத்தையும், சமய ஒற்றுமையினையும் வளர்க்க வேண்டுமானால் பிற மதங்களின் கோட்பாடுகளை அறிதல் அவசியமாகும். பிற சமயங்களைத் தாழ்வாகவோ, இழிவாகவோ கருதக்கூடாது. சமயங்களிடையே உரையாட லையும், உறவாடலையும் வளர்க்க வேண்டும். அதற்காகவே சமாதானத்திற் கான இலங்கை சமயங்களின் ஒன்றியம் அதனை வலியுறுத்தி முன்னெடுத்துச் செல்கின்றது. சமய விழாக்களை சமய நல்லி ணக்க விழாக்களாக அனைவ ரும் இணைந்து கொண்டாடும் போதுதான் ஒற்றுமை தழைக்கும்.

ஆகவே, சமய வெறியைத் தூண்டி அதில் குளிர்காய முனையும் அரசியல்வாதிக ளையும், சமய தலைவர்களை யும் இனங்கண்டு அவர்களை புறந்தள்ளவேண்டும்'' என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமயோசிதமும் நகைச்சுவையும்



நாமறிந்த பெரியார்களில் அடிக்கடி நினைவுக்கு வருபவர்கள் காந்தியடிகள், வின்ஸ்டன் சர்ச்சில், மாவீரன் நெப்போலியன் ஆகியோர்.

காந்தியடிகள் எல்லோரிடமும் அன்பாகப் பழகியவர். சாத்வீகமானவர் என்பதை நாமறிவோம். அவர் ஓர் சமயம் கப்பலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது அவருடன் பிரயாணம் செய்த வெள்ளையன் ஒருவன் காந்தியைப் பற்றி எல்லோரிடமும் இளக்காரமாகப் பேசினான். அவர் முன் நின்று தகாத வார்த்தைகளைச் சொல்லிச் சென்றான். அவனுடைய செய்கைகள் அனைத்தும் அவரை இழிவுபடுத்துவதாகவே இருந்தன. காந்தி வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியவர் என்பதால் அவர்மீது அவனுக்கு அளவில்லாத வெறுப்பு ஏற்பட்டது. காந்தி அவனை அலட்சியம் செய்தார்.

வெள்ளையன் ஒருநாள் அவரைச் சராமாரியாகத் திட்டி எழுதிய கடிதங்கள் சிலவற்றை அவரிடம் கொடுத்து வாசித்துப் பார் என்று கூறிவிட்டுச் சென்றான். கடிதங்களில் அவன் என்ன எழுதியிருப்பான் என்பதை ஒருவாறு ஊகித்துக்கொண்ட காந்தி அந்தக் கடிதங்களைக் கிழித்துக் கசக்கி வீசிவிட்டு அவற்றிலிருந்த குண்டூசியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டார். மறுதினம் அவரிடம் வந்த வெள்ளையன், “என்னுடைய கவிதைகள் எப்படி இருந்தன?” என்று கேலியாகக் கேட்டான். காந்தி அவனிடம், “சாரத்தை எடுத்துக்கொண்டேன், சக்கையை வீசி விட்டேன்” என்றார். ஒருவனை ஒரேயடியாக வீழ்த்த ஆயுதம் எதுவும் தேவையில்லை. இதுபோன்ற சமயோசிதமான வார்த்தைகளே போதுமானவையாகும்.

காந்தியடிகளைப் போலவே, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் சர்ச்சில் பேச்சாற்றல் மிக்கவர் என்பது உலகறிந்த உண்மை. இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்தபோது அவர் இராணுவ அமைச்சராயிருந்தார். இராணுவத்திற்கு அந்நேரம் உணவுப் பொருள் பற்றாக்குறை. குறிப்பாக அவர்களுக்குச் சீனி அதிகம் தேவைப்பட்டது. சர்ச்சில் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். தங்களுடைய தேவைகளுக்கு மேல் உள்ள சீனியை ரேஷன் கடையில் திருப்பிக்கொடுத்துப் பணம் பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறினார். மக்கள் அதை மகிழ்ச்சியோடு செய்தனர். தங்களுடைய நாட்டுப் பற்றை வெளிப்படுத்திக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என மகிழ்ச்சி அடைந்தனர். சர்ச்சில் விடுத்த அறிக்கை சமயோசித புத்தியில் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னில் மனிதம் மலர்ந்திட



அடுத்ததாக மாவீரன் நெப்போலியனை எடுத்துக்கொண்டால் அவனிடம் மதிநுட்பம் இருந்தது. பரீஸ் நகரத்துச் செல்வந்தர்கள் அரசர் நெப்போலியனுக்குப் பெரிய விருந்தொன்று நடத்தினர். விருந்தினர் கூட்டத்தில் ஒரு பெண்மணி விலைமதிப்புள்ள நகைகள் அணிந்திருந்தாள். அவளைப் பார்த்தபோது நடமாடும் நகைக்கடை போலிருந்தாள். "யாருடைய மனைவி அந்தப் பெண்மணி? இவ்வளவு நகைகள் அணிந்திருக்கிறாளே?" என்று அருகில் இருந்த மெய்க்காப்பாளனிடம் கேட்டான் நெப்போலியன். புகையிலை வியாபாரி ஒருவரின் மனைவி என்று பதில் வந்தது. மறுநாளே நெப்போலியன் புகையிலை வாணிபத்தை நாட்டுடைமை ஆக்கச் சட்டம் கொண்டு வந்தான்.

– அருட்சகோதரி ஹாடஸ் F.M.M. –

மனிதம் மலர்ந்திட மனத்திடம் கொண்டிரு
உன் பேச்சு மூச்சு இரண்டிலும் இதைக் கலந்திடு
உன் சொல் செயல் சிந்தனை யாவிலும்
மனிதனாய் வாழ்ந்திட வழி வகுத்திடு

பிறர் உன்னைப் போற்ற ஆசைகொள்ளும் நீ
பிறரைப் போற்றி வாழக் கற்றிடு
தூய்மை உண்மை விடாமுயற்சியில் நிலைத்திருந்து
தூயவனாக வாழ்ந்து சுற்றத்தாரையும் தூய்மையாக்கிடு

உன்னிடமுள்ள பகையாம் பகையை அகற்றி
உன் புன்னகையால் புவியோரைக் கவர்ந்திடு
உன் குடியை உயர்த்த குடியை மறந்திடு
உன்னருகே குடிகொண்டருள்வான் இறைவன் என்றுணர்ந்திடு

இளமையில் இயேசுவில் ஒன்றிப்போம்
இறைமையில் பிறர்துயர் துடைப்போம்
இயேசுவைப் போலென்றும் வாழ்வோம்
இனிதாய் பிறரையும் வாழவைப்போம்.

- ரஜனி ஈஸ்வரன் -

"நல்லார் பொய்யுரையை வெறுப்பர்; பொல்லாரோ வெட்கக்கேடாகவும் இழிவாகவும் நடந்துகொள்வர்.
நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும்; பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும்"

நீதிமொழிகள் 13:5-6

## சிந்திக்க சில வரிகள்... 14

கறுப்புக் கண்ணாடி நீ அணிந்தால்
பார்ப்பது எங்கணும் இருளினையே
பாங்குடன் நீயும் விழித் தெழுந்து
வெள்ளை மனதுடன் வாழு அதுநன்று



ராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருத்தொண்டர் ஸ்தேவானின் மறைசாட்சி மரணம் :

திருச்சபை வளர்ந்து நாளுக்குநாள் விசுவாசிகள் தொகை பெருகவே, அவர்களிடையே சில பிரச்சினைகள் தோன்றலாயின. திருத்தூதர் நற்செய்தியைப் போதிப்பதில் முழுமூச்சாக நின்றபடியினால், அறப்பணிகள் செய்ய நேரம் கிடைக்கவில்லை. கிரேக்கமொழி பேசும் யூதர்கள் தங்கள் கைம்பெண்கள் கவனிக்கப்படவில்லை என எபிரேய மொழி பேசும் யூதர்களுக்கு எதிராக திருத்தூதர்களிடம் முறையிடலாயினர். இதனால் இத்தகைய குறையினை நிறைவு செய்ய தேவ ஆவியின் வல்லமையும், ஞானமும் நிறைந்தவராய் ஏழு திருத்தொண்டர்களை நியமித்தனர். இவர்கள் போதிப்பதற்கல்ல, அறப்பணியாற்ற. எனினும் காலப்போக்கில் இவர்கள் நற்செய்திப் பணியிலும், திருமுழுக்கு அளிப்பதிலும், புதுமைகள் செய்வதிலும், ஈடுபட்டதைக் காண முடிகிறது. (உ+ம் பிலிப்பு, ஸ்தேவான்) இத்தகையோருள் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஸ்தேவான்.

இவர், ஏழு திருத்தொண்டர்களுள் முக்கியமானவராவார். இவர் யௌவன பண்பாட்டு யூதக் கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயற்பட்டவராவார். அருளும் வல்லமையும் நிறைந்த இவர் மக்களிடையே பல புதுமைகள் செய்து, ஞானத்தோடு போதித்து வந்தார். ஒருநாள் உரோமைய சீரேனே, அலெக்சாந்திரியா, சிலிசியா ஆகிய நாடுகளில் இருந்து வந்திருந்த யௌவன பண்பாட்டு யூதர்கள் இவரோடு போதனையிட்டு வாதாடினர். யூதர்களே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனமென்றும் ஏனையோர் இறைவனுக்குத் தேவையில்லை என்றும் இவர்களை நரக நெருப்பிற்கென்றே இறைவன் படைத்ததாயும் வாதாடினர். இவர்களைத் தங்கள் சமூகத்தில் கொண்டுவருவதென்பது கனவிலும் நடக்கமுடியாதென்றும் வாதாடினர்.

ஆனால், ஸ்தேவான் அனைத்துலகையும், அனைத்து மக்களையும் கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கும் இலட்சியம் உடையவர். இறைவன் மனிதன் கையால் கட்டப்பட்ட ஆலயத்திலல்ல, அவர் எங்கும் இருக்கிறார். எனவே, ஜெருசலேம் ஆலயத்தின் காலம் முடிவடைந்துவிட்டதென்றும், நற்செய்தியை நோக்கியிருந்த மோசேயின் சட்டமும், மோசேயின் போதனைகளும் அர்த்தமற்றதாகிவிட்டதென்றும் கருதியவர். எனவே, ஸ்தேவானின் போதனையையும், அவர் வழியாகப் பேசிய பரிசுத்த ஆவியையும் யூதர்களால் எதிர்த்து வாதாடமுடியவில்லை. எனவே, ஸ்தேவான் மோசேயின் கட்டளைகளையும், சட்டங்களையும் மீறியதாகக் கூறி மூப்பர்களையும், மறைநூல் அறிஞரையும் அவருக்கெதிராகத் தூண்டிவிட்டனர்.

குறிப்பாக மூன்று குற்றங்களை ஸ்தேவானுக்கெதிராகச் சாட்டினார்கள்.

1. புனித இடத்திற்கும், திருச்சட்டத்திற்கும் எதிராய்ப் பேசியது.
2. நாசரேத்து இயேசு இவ்விடத்தை அழித்துவிடுவார் எனக் கூறியது.
3. மோசே தமக்குக் காட்டிய முறைகளை இயேசு மாற்றிவிடுவார் எனக் கூறியது.

இதனால் தலைமைக் குரு ஸ்தேவானை விசாரித்தார். எனினும் ஸ்தேவான் தம் சொந்த நியாயத்தை எடுத்துக்கூறாமல் தம் மறையின் விசுவாசத்தைஎடுத்துக்காட்டினார். எபிரேயரின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, எவ்வாறு அவர்களின் முன்னோர்கள் ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாக, தூய ஆவி பேசியதைச் செவிமடுக்க மறுத்து எதிர்த்தனர் என்பதைக் காட்டினார். இவ்வாறே அவர்களின் வாரிசாகிய யூதர்களும் தூய ஆவியை எதிர்ப்பதைச் சுட்டிக் காட்டினார். இதனால் திருச்சட்டத்திற்கு எதிராகப் பேசியதாக ஸ்தேவான்மீது குற்றம் சுமத்தினார்கள். மேலும், இயேசுவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினரைக் கொடுமைப்படுத்திக் கொலை செய்தனர் எனவும், இயேசுவின் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியாரே ஆதாரம்!

- பீ. ஜே. கைலொரன்கலன் -



பலருக்கு வாழ்க்கையின் வாழ்வாதாரம் - அவரது
பலகோடிப் புதுமைகள் தான் மூலாதாரம் - மனதை
மாற்றக்கூடிய மறையுரைகள் எல்லாம் சர்வ சாதாரணம்
பக்தர்களை இறைவன்பால் ஈர்க்கும் ஆதாரம்,
அதுவே அந்தோனி முனீந்திரரின் அவதாரம்!

பிறப்பால் உயர்ந்த குடும்பத்தில் ஜனனம்
வளர்ப்பால் பெற்றாரிட்டது 'பெர்தினாந்து' பெயராம்,
உழைப்பால் செய்த சேவைகளும், புதுமைகளும் ஏராளம்
இறைவார்த்தையால் தன் வாழ்வையே அளித்திட்ட அர்ப்பணம்
பிரான்விஸ்கு சபையைச் தேர்ந்ததே அந்தோனியாம்!

மண்ணில் மலர்ந்த நாள் மரியன்னையின் விண்ணேற்பு
சிறிய வயதிலே சாத்தானை விரட்டியதே முதற் புதுமை,
சிலுவை அடையாளத்தினாலே உலகையே அதிரவைத்த மகிமை,
பெரிய வயதிலே உள்ளம் திறந்த உண்மையான துறவியே
நாம் இவ்வுலகில் காண்பதெல்லாம் கோடி அற்புதமே!

கணமும் பிரியா பல இன பக்த கோடிகள்
தினமும் மறவா பற்பல தேவைகளின் வடிவங்கள்
நிதமம் தேடியே ஓடிவரும் பல்லாயிரம் மக்கள் - தம்
வரங்கள், ஆசைகள் பூர்த்தியாகுமெனும் நம்பிக்கையில்,
செவ்வாய்தோறும் நிரம்பி வழிகிறதே அந்தோனியார் ஆலயங்கள்!

கொலைப் பழியையும் அவர்கள் மேல் சுமத்தினார். மேலும், "இதோ வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளின் வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்" எனக் கூறியபோது ஆத்திரமடைந்த யூதர்கள் அவர்மேல் பாய்ந்து, நகருக்கு வெளியே அவரைத் தள்ளிக்கொண்டு போய்க் கல்லால் எறிந்தனர். அப்போது ஸ்தேவான் "ஆண்டவராகிய இயேசுவே! எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்" எனக்கூறி "இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று உயிர் துறந்தார். இம் மரணமானது இயேசுவின் மரணத்தை ஒத்ததாய் இருந்தது.

எனவே, ஸ்தேவானின் இம் மரணமானது பெரிய யூத கலாபனையாக மாறியது. குறிப்பாக, கிரேக்க மொழி பேசும் யூதர்கள் கொடூரமாய்த் துன்புறுத்தப் பட்டார்கள். எபிரேய மொழி பேசும் யூதர்களும், அப்போஸ்தலர்களும் எருசலேமில் மறைமுகமாய் வாழ ஏனையோர் சிதறுண்டு போய் ஜெருசலேமுக்கு வெளியே சமாரியா, தமஸ்கு, பெனிசியா போன்ற இடங்களில் வாழலாயினர். இது எவ்வாறிருப்பினும் ஸ்தேவானின் மரணமும், யூத கலாபனையுமே திருச்சபை வளர்ச்சிபெற வித்தாய் அமைந்தன என்று கூற முடியும். ■

> "அநீதி ஒவ்வொன்றுக்காகவும் அடுத்திருப்பவர்மீது சினம் கொள்ளாதே;
> இறுமாப்புள்ள செயல்கள் எதையும் செய்யாதே"
>
> [சீராக் 10:6]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமி நிலவின் ஒளி வெள்ளத்தில், வீதியின் குறுக்கே மல்லாந்த நிலையில் அசை வற்றுக் கிடக்கும் அந்த உருவம் எவருடையது என்பதை சார்ஜன் ராமநாதன் அடையாளம் கண்டுகொண்டது என்னவோ உண்மைதான்.

அந்த ஊரிலேயே பெரும் சண்டியனான மல்யுத்த வீரன் சித்தார்த்தனே குடி வெறியில் விழுந்து கிடப்பதையூகித்துக் கொண்டார்.

அவனை உசுப்பி எழுப்பி அல்லது இழுத்து வீதியோரம் படுக்க வைக்கும் நோக்குடன் குனிந்தபோதுதான் கவனித்தார். அவர் மார்பிலும், தோளிலும் ரத்தம் கசிந்து உறைந்து போயிருந்தது.

கருநீல நிறத்து ரீ சேட்டில் அது அவரது கண்களுக்கு முதலில் புலப்படாதிருந்தி ருக்க வேண்டும்.

அவர் அதிர்ச்சியில் உறைந்தார்.

எவரும் தன்னை அடையாளம் காண்பதற்கு முன் அங்கிருந்து அகன்றுவிடத் தலைப்பட்டார்.

வேறொரு சந்தர்ப்பமாக இருந்திருந்தால், அருகிலுள்ள பொலிஸ் ஸ்ரேசனோடு தொடர்பு கொண்டோ அல்லது பிறிதொருவரின் உதவியுடனோ ஆஸ்பத்திரியிலும் சேர்த்திருப்பார், உயிர்மூச்சு இருந்திருந்தால்.


இப்போது எதையுமே செய்யமுடியாத நிலைமையில் தவித்தார். ஒன்றுமே அறியாதவர் போல் அகன்று செல்வதைத் தவிர அவருக்கு வேறு வழி தோன்றவில்லை.

உள்ளூர் ஸ்ரேசனிலேயே கடமையில் இருந்திருந்தால், ரோந்து சுற்றப் போனபோது கண்டதாகக் கூட காட்டிக்கொள்ளலாம். ஒரு காவல்துறை அதிகாரி என்ற முறையில், தனது கடப்பாடு என்ன என்பதனைப் புரிந்துகொண்ட வராய், குற்றுயிராயிருந்தால் காப்பாற்றவும் அல்லது உயிர் பிரிந்திருந்தால் போஸ்ட்மோட்டத்திற்கான அடுக்குகளைக் கவனித்திருக்கவும் கூடும்.

ஆனால், மனிதர் தொலைவிலுள்ள பொலிஸ் ஸ்ரேசனில் இரவுக் கடமையில் இருக்க வேண்டியவர், கடமை நேரத்தில் வீட்டுக்கு நேர காலத்தோடு வந்துசேர்ந்த இந்த நிலைமையில் என்ன செய்வார்?

ஆற்றாமையுடன் அவசர அவசரமாகக் கடமையில் இருந்தாக வேண்டிய தனது ஸ்டேசனுக்கே திரும்பியாக வேண்டிய சங்கடமான நிலையில் புறப்பட்டுப் போனார், வேறு தெரிவு எதுவுமின்றி.

■■■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கம் பெறுவோம்!

நமது திருத்தந்தை பிரான்சிஸ் 2016ம் வருடத்தை இரக்கத்தின் யூபிலி ஆண்டாக அறிவித்துள்ளார். கடந்த வருடம் மார்ச் மாதம் 14ம் நாள் திருத்தந்தை தனது ஆயர் பணியை ஏற்ற 2ம் வருடப் பூர்த்தி நாள் ஆகும். அந்த நாளில் திருத்தந்தை விசேட நன்றிப் பலியை ஒப்புக்கொடுத்த வேளையில் முக்கிய அறிவிப்பு ஒன்றை விடுத்தார். அது இரக்கத்தின் யூபிலி ஆண்டு பற்றியதாகும். 2015 டிசம்பர் மாதம் 08ம் திகதியில் இருந்து அதாவது, மரியன்னையின் அமல உற்பவத் திருநாள் தினத்தில் இருந்து 2016 நவம்பர் மாதம் 20ம் திகதி கொண்டாடப்படவுள்ள கிறிஸ்து அரசர் பெருவிழா வரையிலான ஓராண்டு காலப் பகுதியை நாம் எல்லோரும் இரக்கத்தின் யூபிலி ஆண்டாக அனுசரிக்க வேண்டும் என்பதே திருத்தந்தையின் வேண்டுகோளாகும்.

மேலும், 2ம் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்ற 50வது ஆண்டும் இந்த 2016ம் ஆண்டு என்பதால் திருத்தந்தை அவர்கள் இரக்கத்தின் யுபிலி ஆண்டாக இந்த ஆண்டை அனுசரிக்குமாறு கோருவதில் இரட்டை நியாயம் காணப்படுவதாகவும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

மனிதப் படைப்பே இறைவனது இரக்கத்தின் முதன் முதலான வெளிப்பாடு என்பது எனது திடமான கருத்தாகும். இறைவன் பரிசுத்தர், நல்லவர், தூயவர், விண்ணகத்தில் உறைபவர். சகலவிதமான ஐஸ்வரியங்களினதும் உரிமையாளர். இல்லை என்பதே அவரிடத்தில் இல்லாத கடவுள். தூசிக்கு, புழுதிக்குச் சமானமான மனிதனைப் படைக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏன் வந்தது? தொடக்கநூலில் நாம் படிப்பது போல அவரது உருவிலும், சாயலிலும் மனிதரான நம்மை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு அவருக்கு ஏன் உண்டாயிற்று? முக்காலமும் உணர்ந்த முழுமுதற் கடவுளான அவர் மனிதனைத் தன் உருவிலும் சாயலிலும் உருவாக்கினார் என்றால் அது அவர் மனிதர் மீது காட்டிய அன்பினால், பரிவினால், இரக்கத்தினால் அன்றி வேறு எதற்காக இருக்க முடியும் என் அன்பானவர்களே.

மனிதனைப் படைத்த கடவுள் அவனைத் தன் உருவிலும், சாயலிலும் உருவாக்கிய விண்ணகத் தந்தை "பலுகிப் பெருகுங்கள், பூமியை நிரப்புங்கள். அதனை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். அதனை ஆண்டு அனுபவியுங்கள்" என்று ஆசீரும் அருளினார். ஆனால், கடவுளது கட்டளையை மீறி




அவரைப் பார்க்கப் பயந்து, வெட்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ள...

- அயர்லாந்தில் இரண்டு பேர் சேர்ந்து தற்கொலை செய்ய முயன்று, அதில் ஒருவர் பிழைத்தால், பிழைத்தவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படும்.
- 'வாக்கிங் செல்கிறோம்' என்பதை மலேசியக்காரர்கள், "காற்றைச் சாப்பிடச் செல்கின்றோம்" என்பார்கள்.
- மிக வேகமாக ஏறினால், எவரெஸ்ட் உச்சியை அதன் கீழ் முகாமிலிருந்து 8 மணி 10 நிமிடங்களில் எட்டிவிடலாம்!
- காந்தியாக நடித்து ஆஸ்கர் விருது வென்ற பென் கிங்ஸ்லியின் நிஜப் பெயர் கிருஷ்ண பண்டிட் பான்ஜி!



# விருது

ஐரோப்பிய ஒன்றிய பாராளு மன்றத்தின் உயர்ந்த விருதான, அகில உலக Charlemagne விருது திருத் தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஐரோப்பிய கண்டத் தில் உள்ள நாடுகளின் ஒருங்கிணைப் பிற்காகப் பாடுபடுவோருக்கு வழங்கப்படும் இவ்விரு துக்கு திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவுசெய்யப் பட்டுள்ளார் என்ற செய்தி கடந்த ஆண்டு டிசம்பர் 23ம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. மே மாதம் 6ம் திகதி வெள்ளியன்று மதியம் 12 மணிக்கு வத்திக்கானில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில், ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத் தலைவர், Martin Schulz, விருதுக் குழுவின் தலைவர், Jean Claude Juncker ஆகியோர் கலந்துகொள்கின்றனர். 2014ம் அண்டு திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஐரோப்பிய பாராளுமன்றத் தில் வழங்கிய உரையில், பழம்பெரும் கலாச்சாரங்க ளின் விளைநிலமான ஐரோப்பிய கண்டம் அமைதி யிலும், சமுதாய வளர்ச்சியிலும் அக்கறை காட்ட வேண்டும் என்று விடுத்த அழைப்பு, இவ் விருதினை அவர் பெறுவதற்கு ஒரு காரண மாக அமைந்ததென விருது வழங்கும் குழு அறிவித்துள்ளது.

இரக்கம், சகிப்புத்தன்மை, ஒருங்கி ணைப்பு, படைப்பு அனைத்துடன் வாழும் வழிகள் ஆகியவற்றைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் பணியில் இணைந்துள்ளதற்காக இவ்விருதுக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள் ளார் என்று விருது வழங்கும் குழு வினர் கூறி யுள்ளனர்.

பட்டு ஓடி ஒளித்த மனி தனைத் தேடிச் சென்ற வரும், எங்கே இருக்கிறீர்கள், நான் அளித்த கட்டளையை மீறி விட்டீர் களா? என்று அக்கறையோடு விசாரித்தவரும் அதே இரக்கம் மிக்க கடவுள்தாம் என்பதனை நீங்கள் அறிவீர்கள்.

விடுதலைப் பயண நூல் 34ம் அதிகாரம் 6 முதற் கொண்ட வசனத்தில் கடவுள் தம்மை மோசேக்குக் கீழ்வருமாறு வெளிப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சினம் கொள்ளத் தயங்குபவர், பேரன்பு மிக்கவர், நம்பிக்கைக்கு உரியவர், ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுபவர். கொடுமையையும், குற்றத்தையும், பாவத்தையும் மன்னிப்பவர் தாம் என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடவுளது இரக்கத்தைச் சுவைக்க நாம் விருப்பம் காட்டும் இந்த யுபிலி ஆண்டில் நம்மைப் போலவே கடவுளது சாயலில் உருவாக்கப்பட்டுள்ள நம் சகோதரரரை, அடுத்தவரை, அயலவரைப் பேரன்பு காட்டுவோர்களாய், அவர்களது நம்பிக்கைக்குரிய வர்களாய் நாம் மாறி, அவர்கள் மீது சினம் கொள்ளத் தாமதிப்போராய் நாம் ஆகி அவர்களால் நமக்குக் கொடுமைகள், குற்றங்கள், தவறுகள் புரியப்பட்டிருப்பின் அவற்றை மன்னித்து, மறந்து வாழ முயற்சித்து வெற்றி பெற்றவர்கள் ஆகிடலாமே!

~ ஜே. பத்திநாதன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடியல் தோன்றும்

அங்கங்கள் தனையிழந்து வருந்துகின்ற
அயலானுக்குதவி செய்யும் உள்ளம் வேண்டும்
பங்கமுற்று வாழ்வில் நொந்து பரிதவிக்கும்
பாவியர்க்கும் பரிவு காட்டும் பண்பு வேண்டும்

பெற்றவரோ மற்றவரோ முதுமைத் துன்பம்
பீடித்து வருந்துகையில் தழுவ வேண்டும்
உற்றதுணை அற்றெவரும் உழலும் போது
ஓடிச்சென் றுதவுமுயர் எண்ணம் வேண்டும்

கற்கின்ற வயதினிலே வறுமைத் தீயில்
கருகுகின்ற தளிர்செழிக்க உதவ வேண்டும்
பொற்சுடராய் நாட்டினிலே இளைஞர் வாழ்வு
புதுப்பொலிவு பெற்றாலே விடியல் தோன்றும்

கல்விகலை இலக்கியங்கள் உயர்வு காணின்
காசினியில்இன் னமைதி விருட்சங்கள் வேரைஊன்றும்
இல்லையினி நாட்டினிலே வறுமைத் துன்பம்
எனும்நிலையைத் தோற்றுவிக்க உழைத்தல் வேண்டும்.

தெருவிலுடல் உருகியுயிர் பிரியும் வண்ணம்
தீப்பிழம்பாய் கதிரவனேன் தீய்க்க வேண்டும்...?
அருங்கொடையாய் இயற்கை தந்த சூழல் பேறை
அழித்தொழிக்கும் நிலைவிடுத்துப் பேணவேண்டும்

கனிதந்து காய்தந்து பசியைப் போக்கிக்
களைப்பாற நிழல்தந்து மழையும் தந்து
மனிதரோடு பல்லுயிர்க்கும் வாழ்வளிக்கும்
மரம் வளர்த்து மாநிலத்தைக் காக்கவேண்டும்



**கவிஞர் நிலா தமிழின்தாசன்**

## வாழ்த்துகின்றோம்!



24.05.2016 அன்று
தமது
ஆயத்துவத்தின்
8வது ஆண்டு
நிறைவினைக்
கொணடாடிய
எமது
மட்டக்களப்பு
மறைமாவட்ட
ஆயர் அதிவந்.
கலாநிதி.
யோசப்
பொன்னையா
ஆண்டகையை
வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நினைக்கின்றேன்...!

— பாடுமீன் —

அன்று வழக்கம்போலப் பாடசாலை இடைவேளையில் ஓய்வு அறைக்குள் சென்று அமர்ந்து தேனீரை அருந்தத் தொடங்கியவேளை எனக்குச் சிறிய வயதிலிருந்தே தெரிந்த, என்னுடன் கற்பித்துத் தற்போது வேறு பாடசாலையில் கற்பிக்கும் சுதா என்னிடம் வரக் கண்டேன். 'என்ன இவள் பாடசாலை நேரத்தில், ஏதும் அவசரமோ?' என்று மனம் சிந்திக்க என் சிரிப்பால் அவளை வரவேற்றேன்.

"வா, சுதா. என்ன இண்டைக்கு லீவோ?" எனக் கேட்டு,

"இப்படி இரு" என என் அருகில் இருந்த இருக்கையைக் காட்ட அமர்ந்தாள்.

நான் எடுத்தது போக மீதியிருந்த தேனீரை ஊற்றிக்கொடுத்தேன். அருந்தினாள். அதற்குப் பின்பும் எதுவும் கதைக்காமல் வாளாவிருந்ததால் எனக்கு விடயம் என்ன என்றறியும் ஆர்வம் நூறு வீதத்தைத் தாண்டியது.

"என்ன சுதா, என்ன ஒண்டும் பேசாம இருக்கிறா? என்ன விசயம்?"
என்றேன். அவள் அழாத குறையாக,

"அக்கா! உங்களுக்கு என்னச் சின்ன வயசில இருந்தே தெரியும். நாங்க அப்பா, அம்மாவோட சந்தோசமாத்தானே ஆறுபேரும் வளந்தம்...."

நான் இடைமறித்து,
"அதெல்லாம் ஏன் இப்ப..." என்றேன்.

"நான் என்ட விருப்பத்துக்குக் கலியாணம் கட்டினது வீட்டில விருப்பமில்லதானே? அதில இருந்து எனக்கு எந்த உதவியும் அங்க இருந்து கிடைக்கல்ல. இப்ப இந்த யுத்த காலத்தில இங்க இருக்கிற நிலமயில அவர்ர வேலையும் இல்லாமப் போய்ட்டுது. என்ட சம்பளமும் போதாம இரண்டு பிள்ளைகளையும் வச்சிக்கொண்டு, அதுகள்ட படிப்புச் செலவென்ன?, உடுப்புச் செலவென்ன? இதால கடன்பட வேண்டி வந்திட்டுது. என்ட சம்பளத்தில 'குரு செத', அது இது எண்டு எடுத்து, கழிவு போக மிச்சம் கொஞ்சக் காசே கைபில கிடைக்குது. அதுதான்....."

நான் மீண்டும், "அதுக்கு ..." என்ன செய்வதென்று தெரியாமல் கேட்டுவைத்தேன்.

"இப்ப கடன் தந்த ஒருவன், காசு முழுவதையும் தரச்சொல்லி விரட்டித் திரிபிறான். இன்னொரு கடன் எடுத்தா சமாளிச்சுப் போடலாம்"

நானும் சும்மா இருக்காது,
"இப்ப நான் என்ன செய்யணும்"
என்று ஏதோ ஒன்று பிடிபட்டது போலக் கேட்டேன்.

"நீங்க எனக்கு ஒரு பிணைக் கையெழுத்துப் போட்டா நான் கடன் எடுத்துப் போடுவன். உங்கள உயிர் இருக்கிற வரைக்கும் மறக்கமாட்டனக்கா" என்று முடிக்கவே, எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பிணைக் கையெழுத்துப் போட்டு மாட்டிய பலரின் முகங்கள் மனக் கண்ணில் வந்து சென்றன. அவள் நிலையை யோசிக்கப் பாவமாக இருந்தது. அவள் தொடர்ந்து,

"என்னோட படிப்பிக்கிற சாந்திய உங்களுக்குத்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தெரியும்தானே, அவவும் ஒரு கையெழுத்துப் போடச் சம்மதிச்சிட்டா. அதுதான் உங்கள்ட்டயும் வந்தன். மாசா மாசம் கட்டுப்பணத்த எப்பிடியும் கட்டிப் போடுவன். உங்களுக்கு ஒரு கஷ்டமும் வராது..." என்றவளின் பேச்சு, 'ஓ! சாந்தியும் கையெழுத்துப் போடுறாவா? அப்ப நான் பயப்படத் தேவையில்ல. சாந்திய எனக்கு நல்லாத் தெரியும். நல்ல நண்பி யுங்கூட' என்று என்னைத் தேற்றியது. வீட்டில் யாரிடமும் கலந்தாலோசிக்காது சம்மதம் தெரிவித்தேன்.

இரு நாட்களுக்குள் வங்கிக்குச் சென்று நானும், சாந்தியும் ஒப்பமிட்டோம். அத்துடன் நானிதை மறந்தே போனேன். ஆறு மாதங்கள் சென்றிருக்கும். பாடசாலை முடிந்து வீடு வந்த எனக்குக் கடிதப் பெட்டிக்குள்ளிருந்த வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் அதிர்ச்சியைத் தந்தது. கடன்தாரர் கட்டுப்பணத்தைச் செலுத்தாமையினால் என்னைக் கட்டுமாறு அதில் இருந்தது. எனக்குச் சாந்தியின் எண்ணம் வரத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது அவள்,

"நான் விடமாட்டன். நீங்க பயப்படாதீங்க.... சுதா இண்டைக்குப் பள்ளிக்கு வரல்ல. என்ட மனிசன் கடிதம் பார்த்ததும் திட்டத் தொடங்கிட்டார். நான் அவளின் வீடு சென்று, "ஏனிப்பிடிச் செய்தாய்?" எண்டு கேட்க, அவள் மன்னிப்புக் கேட்டு, நாளைக்கு எப்பிடியெண்டாலும் இதச் சரி செய்திருவன் எண்டு சொன்னதால நான் வந்திட்டன். நீங்க நிம்மதியா இருங்க"

என்று தொலைபேசியை வைத்தாள். எனக்கு சாந்தியின் வார்த்தைகள் இறைவனின் ஆறுதல் வார்த்தைகளாகத் தோன்றின. இறைவனுக்கு நன்றி கூறியதுடன், உளமார சாந்திக்கும் இறையருள் கேட்டு வேண்டினேன்.

என்னால் சாந்தியைப்போல் அலைய முடியாது. என் வாழ்வு அப்படி அமைந்துவிட்டது. இது சாந்திக்குத் தெரியும். எனவே, எனக்குச் சரியான வேளையில் தோள் கொடுத்தாள். நாட்கள் சென்றன. ஏறத்தாழ ஒரு வருடமானபோது, நீதி மன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. கொண்டுவந்தவர் நீதிமன்றில் கடமைபுரியும் என் உறவினர். அவர் வீடு வந்து என்னைப் பலவாறு பயமுறுத்திவிட்டார். வேலைக்கும் நல்லது அல்ல என்ற தோரணையில் அவர் எனக்குக் கொடுத்த அழுத்தம் என்னைத் தாக்கியது. ஆறுதலாக ஒரு வார்த்தையும் அவர் கூறவில்லை. நான் பயந்தேன்.

'என்ன செய்வது?' யோசித்தேன். என் கண்முன் இறை இரக்க ஆண்டவரின் திருவுருவப் படந்தான் வந்தது. வீட்டின் பீடத்தில் வைக்கப்பட்டிருந்த அப்படத்தின் முன் நின்று என் கவலையை அவர் பாதத்தில் வைத்தேன். என்னுள் ஏற்பட்ட உந்துதலால் உடனே இறை இரக்க ஆராதனையை இக் கருத்தை முன்னிட்டு செய்தேன். செபித்து முடியும் வரை என் மனம் அல்லற்பட்டது இறைவன் ஒருவருக்கே தெரியும். 'ஆமென்' என முடிக்கையில், வாயிற் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. "அக்கா..." என்னும் குரல். என்ன அதிசயம் அது சுதாவின் குரல்தான். கதவைத் திறந்தேன்...

"அக்கா.... மன்னிச்சுக் கொள்ளுங்க. என்ட பிழையால உங்களுக்கு அழைப்பாணை வர வச்சுட்டன்..."

அவள் பேசப் பேச என் இதயம் இறை இரக்கத் திருவுருவத்தை நாடியது. நன்றி சொன்னது. 'என்ன இது? ஆண்டவரே உம் இரக்கம் அளவிட முடியாதது. உதவியற்ற எனக்கு எவ்வளவு விரைவாகப் பதில் தந்துள்ளீர். உம் பாதத்தில் வீழ்ந்த என்னிடம் இத்தனை அன்பா?' என் மனம் நன்றி கூறியது. அவள் கதைத்துக்கொண்டே இருந்தாள்.

"நாளைக்கு நாங்க வங்கிக்குப் போய் எல்லாக் காசையும் கட்டி முடிக்கப்போறம். ஏனெண்டா நாங்க அகதிகளாக வெளிநாட்டுக்குப் போகப் போறம்" என்று முடித்தாள்.

மனம் நிறைந்தது. தப்பித்தோம் எனும் அமைதி. மறுநாள் மாலை சாந்தி என்னை சந்தித்தாள். அவள் மூலம் நடந்தவற்றை அறிந்துகொண்டேன்.

"எனக்கு அழைப்பாணை வந்த உடனே, சுதாட வீட்ட போய் நல்லாத் திட்டினனான். அவள் சொன்ன எதையும் கேட்கல்ல. "எனக்கும், நீட்டா டீச்சருக்கும் நீ செஞ்சது பெரிய துரோகம். அவ பாவம். உதவின எங்க ரெண்டு பேருக்கும் நல்லா நன்றிக்கடன் செஞ்சிட்டா" என்றேன்.

அவள் அழத் தொடங்கிற்றாள். எனக்குப் பாவமா இருந்துது. கடவுள்தான் உனக்கு நல்ல புத்தி தரணும்.. நான் வாறன் எண்டு வந்திட்டன். காலையில என்னட்ட வந்து கடன அடைக்கப் போறதாச் சொல்லிட்டுப் போனாள். நல்லவேள இந்த அழைப்பாண அவங்க நாட்ட விட்டு போனபிறகு கிடைக்கல்ல"

21ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## இயற்கை உணவு இதமான வாழ்வு

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் இயற்கையில் விளைந்த காய், கனிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரை, பழங்கள், மற்றும் பச்சைக் காய்கறிகள் அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரை, தானியங்கள், ஓட்ஸ், கொண் டைக்கடலை, கொள்ளு, பருப்பு, கேழ்வரகு ஆகியவற்றைத் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரேஞ், மஞ்சள் வண்ணக் காய்கறிகள் மற்றும் பழங்களும், மக்காச் சோளம் ஆகியவற்றையும் உணவில் சேர்க்கவும். அசைவ உணவுகள் வாரம் ஒரு முறை மட்டும் எடுத்துக்கொள்ளலாம். தினமும் ஒரு முட்டை வேக வைத்துச் சாப்பிட வேண்டும்.

சுண்டக் காய்ச்சிய பால் ஒரு நாளைக்கு நான்கு டம்ளர்கள் அருந்த வேண்டும். காய்கறி களை அரை வேக்காட்டில் சாப்பிடுவதன் மூலம் கால்சியச் சத்து முழுமையாகக் கிடைக்கும்.

உலர்ந்த திராட்சை, பாதாம், காலிஃ பிளவர்,

முட்டைக்கோஸ், வாழைப்பூ, வாழைத் தண்டு, வாழைப்பழம், மாதுளை மற்றும் இரும்புச் சத்து அதிகம் உள்ள உணவு வகைகளையும் தினமும் உணவில் சேர்க்கவும்.

இலுப்பைக் கொட்டையில் இருந்து எண்ணெய் எடுத்து இடுப்பில் தேய்த்தால் நிவாரணம் பெறலாம். உளுந்து, கோதுமை, கஸ்தூரி மஞ்சள் மூன்றையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து அவற்றை வெந்நீரில் கலந்து பற்று போட்டால் முட்டு வாதம், முட்டு வலி குண மாகும்.

சின்ன வெங்காயம் குழம்பில் சேர்க்கலாம். சின்ன வெங்காயம் வெயில் காலத்தில் ஏற்படும் நோய்களைத் தடுக்கக் கூடியது.

இவையெல்லாம் நாம் தினமும் கேட்ட விட யங்களாக இருப்பினும், இவற்றைப் பயன் படுத்திப் பலன் பெறுவோம்....

நன்றி : இணையம்

## சில மனைக் குறிப்புக்கள்

1. சமையலறையில் புகை சூழ்ந்துகொண்டால், சட்டென்று ஒரு துணியை நனைத்துப் பிழிந்து தொங்க விட்டால், உடனடியாகப் புகை இருந்த இடம் தெரியாமல் போய்விடும்


2. சிலிண்டர் மாற்றும்போது புதிய சிலிண்டரில் சாக் பீஸால் திகதியை எழுதிவிட்டால் எப்போது மாற்றினோம் என்று பிறகு திண்டாட வேண்டியதில்லை!



3. உள்ளாடைகளை நாம் குளிக்கப் பயன்படுத்தும் சோப்பைக் கொண்டு துவைத்தால் அரிப்பு, தடிப்பு போன்றவை ஏற்படாமல் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரெட்-வெஜ் கட்லெட்



**தேவையானவை :**

பிரெட் துண்டுகள் - 10, கரட், குடை மிளகாய் 1, உருளைக்கிழங்கு, பச்சை மிளகாய் - 1, கறிவேப்பிலை, எண்ணெய் - 4 தேக்கரண்டி, நெய் - 6 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு

**செய்முறை :**

உருளைக்கிழங்கைத் தோல் சீவி வேக வைத்து மசித்துக்கொள்ளவும். கரட்டை துருவிக் கொள்ளவும். பச்சைமிளகாய், குடைமிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய்விட்டு நறுக்கிய மிளகாய்கள், கரட் துருவல், உப்பு சேர்த்து வதக்கி இறக்கவும். இந்தக் கலவை யுடன் மசித்த உருளைக்கிழங்கு, பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை, பிரெட் சேர்த்து நன்றா கப் பிசைந்து கல்லெட் வடிவில் தட்டவும். தோசைக்கல்லை அடுப்பில் சூடேறவிட்டு கட்லட்டை அதன் மேல் பரவ லாக வைத்து, சுற்றிலும் சிறிதளவு நெய் விடவும். அடுப்பை மிதமான தீயில் வைத்து பொன்னிறமாக வெந்ததும் எடுக்கவும். இதற்கு சில்லி சோஸ் நல்ல காம்பினே சனாகும்.

பிரெட்டுக்குப் பதிலாக பிரெட் தூள், பொடித்த ரஸ்க் சேர்த்தும் செய்யலாம்.

✔ இளையோர் தங்களின் பார்வை மற்றும் எண்ணத்தைச் சமுதாயத்தில் நலிந்தோர் மீது திருப்பினால், அதுவே, சமுதாயத்திற்கு ஆற்றக்கூடிய சிறந்த பணி.


✔ கிறிஸ்தவ நம்பிக்கை, பணிவான, உறுதியான ஒரு புண்ணியம். வாழ்வின் பல துயரங்களில் நம்மைத் தாங்கி நிற்பது இந்த நம்பிக்கையே!

✔ இவ்வுலகின் தீமைகளுக்குரிய காரணம் நமக்குப் புரியவில்லையெனினும், அவற்றைக் களைவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்கும் நம் நம்பிக்கை நமக்கு அழைப்பு விடுக்கிறது.

✔ நம் சகோதர சகோதரிகளுக்கு, குறிப்பாக அதிக உதவி தேவைப்படுவோருக்குத் தாழ்ச்சியுடன் பிறர் அறியாவண்ணம் செய்யும் சேவையே அன்பு என்பதை இயேசு நமக்குக் காண்பிக்கிறார்.

✔ இரக்கம் கொள்ளுதல், துன்பத்தில் பங்கேற்றல் என்ற பண்புகள் வழியாகத்தான் அன்னையாம் திருஅவை அவர்கள் மீது காட்டும் அன்பும் இருக்கவேண்டும்.

## திருத்தந்தை ஆற்றிய உரைகளிலிருந்து...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே தோற்றுவிடுகிறபோது...



- கலாபூஷணம் வித்தகர் வயலற் சரோஜா -

எல்லா விடயங்களுக்குமே 'நிவாரணி' என்று ஒன்று உண்டு. தோல்வி, கவலை, அதைரியம், வறுமை, நோய், மன அழுத்தம், "நான் எதற்கும் கையாலாகாதவன்" என்ற தாழ்வுச் சிக்கல், மனக்குழப்ப நிலை, நிம்மதி நிலைகுலையும் நிலை எதுவாக இருந்தாலும் சரி, இந்த நிவாரணி நிச்சயம் உன்னைக் குணப்படுத்தி விடும். தேவையான எந்த நேரத்திலும் இதை நீங்கள் பயன்படுத்திச் சாதிக் கலாம்.


இந்த அணுகுமுறையால் பல இலட்சம் பேர் சாதனை படைத்துள் ளார்கள். நீங்கள் எல்லாமே தோற்று விட்டது என்று இடிந்திருக்கும் போது, மூன்று விடயத்தை நம்புங்கள் வெற்றி நிச்சயம் அதுதான்.

1வது உழைப்பு

2வது உழைப்பு

3வது உழைப்பு

"நான் அதிஸ்டமில்லாதவன்" என்ற போர்வையைத் தூக்கித் தூர வீசுங்கள். "எனக்குச் சந்தர்ப்பம், சூழ்நிலை அமையவில்லை" என்று "சூள்" உரைக்காதீர்கள். அதிர்ஸ்டம், சந்தர்ப்பம், சூழ்நிலை எல்லாமே உங்களிடந்தானே நிறையவே உண்டு.



உலக சாதனைகளைப் படைத்து, இருண்ட சமூகங்க ளுக்கு ஒளி வீசிய சாதாரண மனிதர்கள் சாதனையா ளர்களாக இமயம் ஏறியதை நோக்குவோம்.

பலமுறை தோல்வி அடைந்து பல பாடசாலை பல பாடசாலை ஆசிரியர்களால் "முட்டாள், மடையன், லூசன், இவன் ஒரு மொக்கன் இவனுக்கு பாடமே ஏறாது" என்று சீல் குத்தி பாடசாலை களை விட்டுத் துரத்தி அடித்தார் கள். அவர்தான் இரவைப் பகலாக்கிய தோமஸ் அல்வா எடிசன். பதினொரு வயதில் தந்தையை இழந்தார். வறுமை யில் வாடிய குடும்பத்தைக் காக்க புகைவண்டியில் பயணிக ளுக்குப் புதினப் பத்திரிகை களை விற்க ஆரம்பித்தார். பின்பு வண்டியின் ஒரு பகுதி யில் தாமே செய்தித்தாள் ஒன்றை அச்சிட்டுத் தானே விற்பனை செய்தார். இரசாயனப் பொருள் சிந்தியதால், தீப்பற்றி யதன் விளைவாக அந்தப் பெட்டி நெருப்பிற்கு இரையாகியது. அதன் காவலர் சிறுவனை இழுத்துத் தள்ளிக் கன்னத்தில் அறைந்ததால் அவரது ஒரு காது செவிடாகியது.

புகையிரதத் தலைவரின் குழந்தையை எடிசன் காப்பாற்றி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதால், தலைவர் நன்றிக் கடனாகத் தந்தியடிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்தார். எடிசனுக்குத் தந்தி அலுவலகத்தில் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டியது. தந்திக் கம்பி ஊடாகப் பல செய்திகளை ஒரே நேரத்தில் அனுப்பும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார். இதனால் விற்பனை உரிமைக்காக எட்டாயிரம் பவுண் கிடைக்கவே, அதைக் கொண்டு ஒரு ஆய்வுக்கூடத்தை நிறுவினார். இரவு பகலாக உழைத்தார்.... உழைத்தார். கடின உழைப்பின் பயனாக மின்குமிழ், புகைப் படக் கருவி, தொலைபேசி, இசைத்தட்டு, புகைவண்டிக் கருவி, திரைப்படக் கருவி, இப்படிப் பல கருவிகளை உலகிற்கு வழங்கியவர் அமெரிக்க நாட்டு அறிவியல் மேதையான தோமஸ் அல்வாதான். அவருக்கு 1915ல் பௌதீகத் துறைக்கான நோபல் பரிசு கிடைத்தது.

அவரை எள்ளி நகையாடிய ஆசிரியர்களால் ஒரு மின்குமிழையேனும் தயாரிக்க முடிந்ததா? இப்போதாவது புரிந்துகொள்ளுங்கள். உங்களை எள்ளிநகையாடுவோர் உங்களைவிட, மிக மிக கீழ்த்தரமானவர்களே. உங்களுக்குள் தேடுங்கள் மாபெரும் புதையலைக் கண்டடைவீர்கள். மற்றவர்களை விட அதிகம் சாதித்த அவர் 1093 கண்டுபிடிப்பு உரிமைகள், அவரது உழைப்பின் வெற்றிக்குச் சான்று. பிசினைத் தயாரிக்க எந்தத் தாவரம் பயன்படும் என்பதைக் கண்டறிய பதினேழாயிரம் வகையான தாவர வகைமீது சோதனைகளை நடத்தி வெற்றி கண்டுள்ளார். பதினேழாயிரம் முறை தோல்வியடைந்தபின்னே வெற்றி பெற்றார். வெற்றி உடனே வராது. கடும் முயற்சி, உடும் உழைப்பாலேயே உருவாகும்.

அடுத்து கெலன் கெல்லர் பற்றி நோக்கினால், பத்தொன்பது மாதக் குழந்தையாயிருந்தபோது நோய்வாய்ப்பட்டுத் தனது கண்பார்வையை இழந்தாள். காதுகளும் செவிடாயின. வாயும் பேச முடியாததாகப் போய்விட்டது. முக்கிய உறுப்புகள் ஆற்றலை இழந்த பின்பு, அந்தக் குழந்தை பிற்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கி, பட்டங்கள் பல பெற்று, கேட்போர் வியக்கும் வண்ணம் சொற்பொழிவாற்றி, சிறந்த எழுத்தாளராக உலகிற்கு




**மாணவன்:** என்ன சேர் எனக்குக் கணக்கில சைபர் மார்க் போட்டிருக்கிறீங்க?

**ஆசிரியர் :** அதுக்குக் கீழ போட ஏலாதே. அதானாலதான்

**ஆசிரியர் :** எந்த வேலையாக இருந்தாலும் அதை உற்சாகமாகப் பாடிக்கொண்டே செய்பவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும்.

**மாணவன் :** அப்படியென்றால் கொசுவை உங்களுக்கு ரொம்பவும் பிடிக்குமா சேர்?



அறிமுகமானது. அதுவும் இருபதாம் நூற்றாண்டில்.

இவர் அமெரிக்க நாட்டின் "டஸ்கம்பியா" என்ற சிறிய நகரில்தான் பிறந்தார். இவளுக்கு தனிப்பட்டவிதமாக "ஆன்சலிவன்" என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவரது அன்பும், பொறுமையும், சகிப்புத் தன்மையும், பரித்தியாக சிந்தையும் கெலன் கெல்லரை உலக சாதனையாளராக்கியது. பட்டதாரியான ஆன்சலிவன், குருடர் கல்வி பயிலும் பிரெய்லி முறைநூல்கள் வழியே கல்வி புகட்டினார். கெலன் ஆங்கில இலக்கிய பட்டதாரியாகி அதிசய சாதனை படைத்தார்.

"சார்லி சாப்லின்" உலகப் பிரசித்தி பெற்ற சிரிப்பூட்டும் நடிகன். இவர் இலண்டன் நாட்டவர். பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு முன்பே தந்தை காலமானார். தாய் தொழில் புரியும் தகுதி இழந்தார். சார்லி சாப்லின் தன்னிகரற்ற கடும் உழைப்பாலும், விடாமுயற்சியாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாலிவூட்டின் நகைச்சுவை நடிகராக உயர்ந் தார். இன்னும் எத்தனை சாதனையாளர்கள். 27 வருடங்கள் சிறையில் வாடிய சிந்தனைப் பறவை நெல்சன் மண்டேலா கூட ஆடு மாடு களை மேய்க்கும் வேலை செய்தவர்தான்.

மேலும், நெப்போலியன், ஆபிரகாம் லிங்கன், மாசேதுங், பேனாட்ஷா, வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆகியோரில் வில்லியம் ஷேக்ஸ்பியர் உலக ஆங்கில நாடக எழுத்துலக மேதை. இவர்கூட நாடக மேடையின் திரைச் சீலையை இழுத்து மூடியவர்தான். அமெரிக்கா விற்கு இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்றுக் கொடுத்த ஜார்ஜ் வாஷிங்டன் கூட பண்ணைக் குடும்பத்தில் பிறந்து உழவுத் தொழிலில் உழன் றவர்தான்.

மேரி கியூரி அம்மையார் கூட அயராத உழைப்பால் ரேடியத்தைக் கண்டுபிடித்துச் சாதனை படைத்தார். இரவீந்திரநாத் தாகூர் பாரத தேசக் கவிஞர். பாரத நாட்டுத் தேசிய கீதத்தை இயற்றினார். இளமையில் பெற்றோரை இழந்த வர்தான். இவர் இயற்றிய 'கீதாஞ்சலி' 1913ல் நோபல் பரிசு பெற்றது. சாந்தி நிகேதனம், விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். இவரே காந்திக்கு 'மகாத்மா' என்ற பட்டப் பெயரைச் சூட்டினார்.

இரும்புப் பெண்மணி மாக்கிறட் தச்சர் மளிகைக் கடைக்காரரின் மகள்தான். மன வலிமையும், உழைப்புமே அவரை உயர்த்தி யது. சோவியத் யூனியனின் ஆட்சி நிர்வாகத்தில் புரட்சியைத் தோற்றுவித்த குருஷ்சேவ் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகன். தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சரான காமராஜர் புடைவைக் கடையில் விற்பனையாளராகப் புடவை அளந்தவர்தான். ரஷ்ய நாட்டுத் தலைவர் டார்வின் செருப்புத் தைக்கும் செம்மானின் மகனேயாவார்.

முன்னேற முதல் வேண்டாம். மனஉறுதி, விடாமுயற்சியுடன் கூடிய உழைப்பு, உழைப்பு, உழைப்பே!

"உங்கள் சிந்தனை எப்படியோ அப்படியே உங்கள் வாழ்க்கையும்" ■■■

# உலகெங்கும் மரியாளின் புகழ்...

## கிறிஸ்தவர்களின் சகாய அன்னை

பிலிப்ஸ்டார்ப், ஜெர்மனி.

14



பிலிப்ஸ்டார்ப் என்பது ஜெர்மனியின் பொஹிமியாவிற்கு வடக்கே, மக்கள் புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஒரு அமைவிடமாகும். இந்நகரில் மக்தலேனா கேட் (1835 - 1903) என்ற பெயரில் நெசவு தொழில் செய்யும் ஒரு பெண்மணி இருந்தார். 1866 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் அன்னை மரியா தோன்றி அவளது நோய் குணமடையும் என்று உறுதியளித்தார். மறுநாள் அதிசயிக்கத்தக்க விதமாக நோயிலிருந்து சுகம் பெற்ற அப்பெண் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்ந்தார். அப்பெண்ணின் இல்லமானது, அன்னை மரி காட்சியளித்ததன் காரணமாக, 'அருள் இல்லம்' என அழைக்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் இங்கு வருகை தரத் தொடங்கியதால் அருளின் ஆலயம் என்ற பெயரில் ஒரு சிற்றாலயமும் கட்டப்பட்டது. அதன் பிறகு, மரியாள், "கிறிஸ்தவர்களின் சகாய அன்னை ஆலயம்" என்ற பெயரில் ஒரு மாபெரும் ஆலயம் அதே இடத்தில் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் அவ்வாலயம் இளநிலை பசிலிக்காவாக உயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜென் தத்துவங்கள் 4

# சிறந்த வாழ்க்கை



## நினைத்தால் நிச்சயம் விடலாம் :

தன் பலவீனங்களை விட்டுவிட முடியவில்லை, என்ற புகாருடன் ஒரு துறவியைத் தேடிப்போனான் ஓர் இளைஞன்.
"சிறிது தூரம் உலாவிவிட்டு வருவோம்" என்று துறவி அழைத்தார். வழியில் தென்பட்ட மரமொன்றை இறுகக் கட்டிக்கொண்ட துறவி, "இந்த மரம் என்னை விடமாட்டேன் என்கிறது" என்று அலறி ஆர்ப்பாட்டம் செய்தார். துறவியின் கைகளை விடுவிக்க இளைஞர் முயன்றார். துறவியோ, மரத்தை இறுகப் பற்றியிருந்தார். குழப்பமடைந்த இளைஞரிடம் சொன்னார்,
"மரம் என்னைப் பற்றவில்லை என்று உமக்குத் தெரிகிறதல்லவா? உன் பலவீனங்களைக்கூட நீதான் பற்றியுள்ளாய். நீயாக அதை விட நினைத்தால் நிச்சயம் விடலாம்" என்றார் துறவி.

- ஜே.எச்.இரத்தினராஜா -

## மற்றவர்களின் அனுபவங்கள் தேன்துளிகள்தான் :

மற்றவர்களின் அனுபவங்களைக் கேட்பதில் விருப்பமில்லாத, இளைஞனான தன் மகனிடம் விரைவில் செரிக்கும் முக்கிய உணவின் பட்டியலை எழுதச் சொன்னார் அவனுடைய தந்தை. அவனுடைய பட்டியலில் முதலில் இருந்தது 'தேன்'. அதைப் பார்த்ததும் தந்தையின் முகத்தில் புன்னகை அரும்பியது. மகனிடம் கேட்டார், "தேன் ஏன் சீக்கிரம் செரிக்கிறது தெரியுமா?" தேனீ அதை ஏற்கனவே செரித்துவிட்டது. மற்றவர்களின் அனுபவங்களும் தேன் துளிகள்தான். அவர்களது அனுபவங்கள் உனக்குள் கலந்து சக்தி கொடுக்கும். இளைஞனுக்கு விஷயம் புரிந்தது.

பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்சகோ: லூட்ஸ் F.M.M, அவர்கள் 08.06.2016 அன்று தமது துறவற வாழ்வின் பொன்விழாவைப் பூர்த்தி செய்கிறார். யாழ்ப்பாணத்தைத் தாயகமாகக் கொண்டவர். மட்டக்களப்பு-சின்ன உப்போடையிலமைந்துள்ள புனித திரேசா கன்னியர் இல்லத்திலிருந்து தற்போது பணி புரியும் இவரது பொன்விழா 08.06.2016 அன்று இவரது சொந்த ஊரில் சிறப்பிக்கப்படவுள்ளது. தற்போது புளியடிக்குடாப் பங்கில் பணிபுரியும் இவர் இதற்கு முன்பு தேற்றாத்தீவுப் பங்கிலும், அதற்கு முன் புளியடிக்குடாப் பங்கிலும் பணி புரிந்தவர். தம் பணி வாழ்வில் 24 வருடங்களை மட்டக்களப்பு மண்ணில் கழித்தவர். புனித திரேசா கன்னியர் இல்லத்தில் 28.05.2016 அன்றும், 29.05.2016 அன்று புனித செபஸ்தியார் ஆலயத்திலும் இவரது பொன்விழா சிறப்பிக்கப்பட்டது. இவர் மட்டக்களப்பு சமூகத்தொடர்பு நிலைய வெளியீடான "தொண்டன்" சஞ்சிகையில் தொடர்ந்து ஆக்கங்களை எழுதிவருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. இவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவரது பணிவாழ்வு மென்மேலும் சிறக்க வேண்டிய அருள்வரங்களையும் இறைவனிடம் இறைஞ்சி நிற்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- பாறூர்வேந்தன் -

இந்திய அரசியலை விடவும், அதன் கொள்கை வகுப்பாளர்களின் செயற்பாட்டை விடவும், ஏனைய புத்திசாலிகளதும், புத்தி ஜீவிகளதும் செயற்பாடுகள் பாராட்டக்குரியனதான்! விண்ணை முட்டும் அளவுக்கு அவர்களது செயற்பாடுகளும் புத்திசாதுரியங்களும் உலகால் வியந்து நோக்கப்படுகின்றன. இருந்தும் அரசியல் அரங்கத்தைப் பொறுத்தவரையில் உள்நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் பாமர மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையில்லாத போக்கு தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இதற்கிடையில் எத்துணை தூரம் விஞ்ஞானத்தில், மருத்துவத்தில், அறிவியலில் அந்நாடு முன்னேற்றங்கள் பலவற்றைக் கண்டிருந்தாலும் அரசியல் கொள்கை வகுப்பாளர்களாக அங்கு அமைபவர்கள் குறித்துச் சந்தேகம் கொள்ளவேண்டியிருக்கிறது. வடிகட்டிய அறிவாளிகளா? அல்லது வடிகட்டிய முட்டாள்களா? புரியவேயில்லை. இத்தனை அனுபவங்களைச் சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து அது பெற்றிருந்தாலும் அவற்றினின்றும் அது பாடம் கற்றுக் கொண்டதாகக் காணோம்.

பாகிஸ்தானை உடைக்கவேண்டிய தேவை அதற்கிருந்தது. 1970 களில் இந்திராகாந்தி துணிச்சலுடன் அதை முன்னெடுத்தார். ஆனாலும், அதனால் பாகிஸ்தான் என்கின்ற ஒரு பகை நாட்டுக்குப் பதிலாக இரண்டு பகை நாடுகளை உருவாக்கிக் கொண்டது இந்தியா! பங்களாதேஷ் யுத்தத்தின்போது அங்கே போராடிய அறிவு ஜீவிகளை, பல்கலைக்கழக மாணவர்கள், போராசிரியர்கள் என்று பலரையும் திட்டமிட்டு அழித்துக் கட்டியது. அவர்கள் பிற்காலத்தில் பங்களாதேஷை வளர்த்து இந்தியாவிற்கெதிரான இன்னுமொரு சக்தியாக வந்துவிடக் கூடாதேயென்ற அடிப்படையில் அதன் கொள்கை வகுப்பாளர்களது சிந்தையில் உதித்த ஞானோதயம் அது. கடைசியில் என்ன நடந்தது? இன்றுவரை தங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கித் தந்ததேயென்று நன்றி பாராட்டத்தானும் அந்நாடு முன்வந்ததில்லை. காரணம் அது பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவமும் விளைவுகளும்.

இலங்கையில் தமிழீழப் போராட்டங்களின் போதும் அது முனைப்பாக தமிழர் தரப்புக்கு உதவவில்லை. விசேடமாகத் தீவிர ஆயுத போராட்டத்தையே முன்னின்று முறியடித்து சிங்கள நாட்டுக்கு உதவியது. பலன்? இன்று சிங்கள நாடு அதனோடு இல்லை. அதன் எதிரியாகக் கொள்ளக் கூடிய சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் நட்புக்கொண்டு செயற்படும் ஒரு நாடாகத்தான் அது இருக்கிறது. அநேகமாக இன்று இந்தியாவைச் சூழ நான்கு புறமும் எதிரிகளைக் கொண்ட நாடாக அது இருக்கிறது என்றால் அது மிகையில்லை.

தமிழ்ப் போராட்டத்தின்போது தமிழர் தரப்பை ஆதரித்து ஒரு தீர்வைப் பெற்றுத் தந்திருந்தால் அதற்குப் பலமானதொரு சார்பு நாடு கிடைத்திருக்கும். மாறாக, தனிப்பட்ட குரோதங்களை நிறைவேற்றப் போய் தமிழ் மக்களின் ஆதரவை அது இழந்து நிற்கிறது. மாறாக, வழமை போன்று இந்தியாவிற்குப் பேய்க் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனுள்ள குறிப்புகள்...

1. பால் கெட்டுப்போய்விட்டால் தூர எறியாமல் வெள்ளிப் பாத்திரங்களையும், வெள்ளி நகைகளையும் அதில் 15 நிமிடங்கள் ஊறவைத்துத் தேய்க்க பளபளவென்று புதியது போல மின்னும்.

2. பூண்டு, வெங்காயம் நறுக்கியபின் கையில் உப்பைத் தேய்த்து தண்ணீர்விட்டுக் கைகளைக் கழுவினால் கைகளில் வாடை வீசாது.

3. தயிர், மோர் பாத்திரத்தைப் புளியை உபயோகித்து சுத்தம்செய்து வெயிலில் உலர்த்த வாடை ஓடிவிடும்.

4. வீட்டில் ஆங்காங்கே மயிலிறகை ஒட்டிவைத்தால் அழகாக இருப்பதோடு, பல்லித் தொல்லையிலிருந்தும் விடுபடலாம்.

5. டூத்பேஸ்ட்டின் மிச்சத்தை எடுக்க, சுடுநீரில் 15 நிமிடம் போட்டு பிறகு எடுத்து அழுத்தினால், முழுவதும் வந்துவிடும்.



இலங்கையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் நிறுத்தப்பட்டதும் ஏதோ தன்னுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் புதிய ஆட்சியாளர்கள் செயற்படுகிறார்கள் என்று இந்தியாவும். ஏன் அமெரிக்காவும் கூட நம்பியிருந்தன. ஆனால், நடந்ததோ வேறு! துறைமுக நகரத் திட்டம் மட்டுமல்ல, மாத்தளன், அம்பாந்தோட்டை என்று எல்லாமே சீனாவின் கரங்களில் சிக்குண்டுவிட்டன. ரணில் விக்கிரமசிங்ஹ என்கின்ற தந்திரியின் நடவடிக்கைகளை அறிந்தவர்களுக்கு இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால், இந்தியா ஏன் இன்னும் தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை என்பதுதான் விளங்கவில்லை. 'சவுத் ப்ளொக்' கொள்கை வகுப்பாளர்கள் திருந்தவேயில்லை. திருந்தப் போவதுமில்லை என்பது இலங்கை விடயத்தில் இன்னும் பலமாக நிரூபிக்கப்படத்தான் போகிறது. மிகப்பெரும் வல்லரசு நாடுகளைப் பேய்க் காட்டும் திறனும். வல்லமையும் கொண்ட இலங்கைக்குத் தமிழர்களை உள்ளூரிலே நிலையகுலையப் பண்ணவது என்பது ஒன்றும் பெரிய விடயமல்ல.

பிச்சைத் தட்டு சுருங்கிச் சுருங்கி சமஷ்டிக்கு அளவாக குறுகியதுதான் மிச்சம். காலப்போக்கில் பாண்டவர்கள் போன்று குறைந்தது உயிர் வாழவாவது விடு என்று கெஞ்சும் நிலைவரத்தான் போகிறது. தமிழர் தரப்பு இன்னும் யார் பெரியவர் என்கின்ற போட்டியில் சிக்குண்டு. காட்டிக் கொடுப்பவர்கள் தலைமையில் புதிய கூட்டுக்களை உருவாக்கிக் கொண்டு, எதுவித முன்னெடுப்புக்களையும் கொண்டிராத நிலை பரிதாபமானது. சிங்கள இனம் சமஷ்டிக்கு எதிர்ப்பு, முஸ்லிம்கள் இணைப்புக்கு எதிர்ப்பு (ஆனாலும் நமக்கான் மாகாண சபை அவர்களால் பயன்படுத்தப்படுகிறது), வெளிநாட்டு ஆதரவை நம்புவது திரிசங்கு சொர்க்க நிலையை உருவாக்கும் என்கின்ற நிலை. ஏதோ நாம் பேசி வென்றுவிடுவோம் என்கின்றது தமிழர் தரப்பு. யாருடன் பேசி, எதை வெல்லப்போகிறார்கள் தெரியவில்லை. அனைத்துப் பகுதிகளிலும் தீவிரமாக நடைபெறும் சிங்கஎக் குடியேற்றங்கள். தடுத்து நிறுத்துவார் யாருமில்லை. தமிழர் கழுத்தில் சுருக்கை நல்ல முறையில் மாட்டி முடிக்கும் வரையில் தீர்வு பற்றி அரசு யோசிக்கப் போவதில்லை. சரியானநேரத்தில், சரியான முறையில் தமிழன் குரல் நசுக்கப்பட்டு அவன் காட்சியகங்களில் காட்சிப் பொருளாகிப் போவான்!.

மீண்டும் தந்தை செல்வாவின் கூற்றைத் தான் மனதில் கொள்ளவேண்டியிருக்கிறது.

**'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!'**

**நன்றியுடன் நினைக்கின்றேன் .....**

....... என முடித்தாள். நான் மனநிறைவோடு அவளை உபசரித்து விடைகொடுத்தனுப்பிவிட்டு இறை இரக்க ஆண்டவரை கண்கொட்டாமல் பார்த்துக் கண்ணீரால் நன்றியைத் தெரிவித்தேன்.

**(உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/தர மாணவர்களுக்கானது

தரம் - 11

பாடங்கள் 9-10 பகுதி - 01

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

**71. ஆயர்களின் பணி யாது?**
- கற்பித்தல்
- திருச்சபையை நிர்வகித்தல்.
- இறைமக்களைத் தூய்மைப்படுத்தல்.
- அருளடையாளங்களை வழங்கல்.
- குருக்களை உருவாக்கல்.

**72. குருக்களின் பணி என்பது:**
- நற்செய்தி அறிவித்தல்.
- நல்ல ஆயனாக வழிநடத்தல்.
- திருவழிபாட்டை நடாத்தல்.
- மறைக்கல்வி வழங்கல்.
- குருத்துவம் தவிர ஏனைய அருளடையாளங்களை வழங்கல்.

**73. திருத்தொண்டர்களின் பணி யாது?**
- இறைவார்த்தையை விளக்கல்.
- நற்கருணையை வழங்கல்.
- திருமுழுக்கு வழங்கல்.
- ஆயருக்கும், குருவுக்கும் உதவி செய்தல்.

**74. குருத்துவம் என்னும் அருளடையாளம் எவ்வாறு வழங்கப்படுகிறது?**

குருத்துவம் பெற இருப்பவரின் தலைமேல் கையை வைத்துச் செபிப்பதன் மூலம்

**75. பொதுக்குருத்துவம் வழியாக பொதுநிலையினர் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முப்பணிகளும் எவை?**
- போதிக்கும் பணி
- புனிதப்படுத்தும் பணி
- வழிநடத்தும் பணி

**76. கிறிஸ்தவ விசுவாசிகள் எனப்படுபவர் யார்?**

பொதுநிலையினர், குருக்கள்

**77. பொதுநிலையினருக்குள் அடங்குவோர்:**

துறவிகள், துறவிகள் அல்லாதோர்

**78. வாழ்வில் ஒருமுறை மட்டும் பெறும் அருளடையாளங்களின் பொதுப் பண்புகள் இரண்டு எழுதுக:**
- கிறிஸ்மா தைலத்தால் அபிசேகம் செய்தல்.
- ஆன்மாவில் அழியாத முத்திரையைப் பதித்தல்.

**79. துறவற வாழ்வுக்குரிய ஒழுங்குகளை எழுதிக் கொடுத்தவர் யார்?**

புனித ஆசீர்வாதப்பர்

**80. துறவற குழு வாழ்வின் நிறுவுனர் யார்?**

புனித பக்கோமியுஸ்

**81. துறவற வாழ்வின் வரலாற்றில் முக்கிய பங்கு வகித்தவர்கள் யாவர்?**
- புனித தேப்ஸ் சின்னப்பர்
- வனத்து அந்தோனியார்
- புனித பக்கோமியுஸ்

**82. இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் முதலாவதாக வந்த மறைத்தூதுக் குழு எது?**

பிரான்சிஸ்கன் துறவற சபை

**83. வீடுகளிலிருந்துகொண்டு இயேசுவுக்கு தங்களை அர்ப்பணித்து திருமண வாழ்வைத் துறந்து பல ஒறுத்தல் முயற்சிகளில் வாழ்ந்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**

தபோதனர்

**84. ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என அழைக்கப்பட்டவர்கள் யார்?**

தேப்ஸ் சின்னப்பர், எகிப்திய அந்தோனியார்

**85. கிறிஸ்தவன் இவ்வுலகில் வாழும் வாழ்க்கை முறையானது :**

1. குருத்துவ வாழ்வு
2. துறவற வாழ்வு
3. திருமண வாழ்வு
4. தனி வாழ்வு

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்




மற்றில்டா இராஜேந்திரம்

## ஜுன் - 2016



### ஜுன் 05ந் திகதி : புனித பொனிபஸ்

வெசக்ஸ் அரசின் கிரெடிட்டன் நகரில் பிறந்தவர் வின்பிரிட் எனும் இயற்பெயருடைய பொனிபஸ் வசதிமிக்க குடும்பத்தில் பிறந்த இவருக்குப் பெற்றோர் மதம் சார்ந்த நல்லொழுக்கங்களைக் கற்பித்தார்கள். தமது வீட்டுக்கு வந்து செல்லும் துறவிகளைக் கண்டு அவர்களால் கவரப்பட்டுத் துறவியாக முடிவெடுத்தார். மிகுந்த போராட்டத்தின் பின் தந்தையின் அனுமதி பெற்றார். எக்செட்டரிலிருந்த ஆசீர்வாதப்பர் துறவு இல்லம் செல்லும்போது இவருக்கு 7 வயது. அங்கு கல்வி கற்ற இவர் ஹாம்புஷயரில் இருந்த நுட்செலே துறவு இல்லம் சென்றார். முப்பது வயதில் குருத்துவ அருட்பொழிவு பெற்றார். பிரிசியரை மனந்திருப்ப 716ம் வருடம் அந்நாட்டு அரசர் ராட்போட்டின் அனுமதி பெறுமதி பெற்றுச் சென்று நற்செய்தி யறிவித்தார். சரியான பலன் கிடைக்காததால் மீண்டும் நுட்செலே சென்றார். திருத்தந்தை 2ம் கிரகறியைச் சந்தித்துப் பேசினார். அவர்தான் இவரது பெயரை பொனிபஸ் என்று மாற்றினார். அத்துடன் 'அனைத்துச் சமய மக்களின் மறைபோதகர்' என்றும் அறிவித்தார். திருத்தந்தையின் வேண்கோளை யேற்றுத் துருக்கியரிடம் பணியாற்றியவேளையில் அரசர் ராட்போட் இறந்த செய்தி கேட்டு பிரிசியா சென்றார். வில்லிபிரார்ட்டுடன் இணைந்து பணியாற்றிப் பலரைத் திருமறைக்குக் கொண்டுவந்தார். 722ம் வருடம் கார்த்திகைத் திங்கள் 30ம் நாளில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அத்தடன் ஜெர்மனி முழுவதும் மறைபரப்புப் பணி செய்யும் பொறுப்பையும் திருத்தந்தை இவரிடம் ஒப்படைத்தார். இவரின் வாழ்வாலும், வார்த்தையாலும் பலர் திருமுழுக்குப் பெற்றனர். இவர் திருச்சபையைச் சீர்திருத்தினார். குருக்க ளுக்காகப் பல சட்டதிட்டங்களை உருவாக்கினார். பல இடங்களுக்கும் பணிபரியச் சென்ற இவர் இறுதியாகச் 'சுயீடர்சி' என்ற குலத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தங்கிப் போதித்தார். அந்த மக்கள் தமது மதம் அழிந்துவிடும் என்ற பயத்தில் 754ம் வருடம் ஆனித் திங்கள் 5ம் நாளில் அவரது இல்லம் சென்று அவரைத் தாக்கித் தலையை வெட்டினர். அவரோடு 52 பேரையும் கொன்றனர்.

### ஜுன் 19ந் திகதி : புனித ரோமுவால்ட்




இத்தாலி நாட்டில் ரவென்னா நகரில் 950ம் வருடமளவில் பிறந்தார். செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த இவர் பொறுப்பற்றவராகவும், ஆடம்பரமாகவும், அலங்காரப் பிரியராகவும் வாழ்ந்தார். தன் பெயரைக் களங்கப்படுத்துமளவு நடந்து கொண்டார். 20 வயதானபோது இவரது தந்தை செர்ஜியுஸ் தன் பகைவருடன் போரிட்டபோது ஒருவரைக் கொன்றுவிட்டதன் காரணத்தால் ஓடி ஒளிந்துகொண்டார். இந்தச் சம்பவம் ரோமுவால்டைப் பாதித்தது. தன் தந்தையின் தவறுக்குப் பரிகாரம் செய்யும் நோக்குடன் ரவென்னாவுக்கருகில் க்ளாசேயில் இருந்த புனித அப்போல்லி னாரேயினது துறவு இல்லத்தில் சேர்ந்தார். அங்கு கடுமையான விதிமுறைகள் எதுவும் பெரிதாகக் காணப்படவில்லை. இந்த நிலை அவருக்குத் திருப்தியாக இராததால், வெனிஸ் நகரம் சென்றார். அங்கு மரினுஸ் எனும் துறவியின் வழிநடத்து தலில் தன்னை நெறிப்படுத்திக் கடுந் தவத்துடன் கூடிய செபவாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்தார். மரினுசும் இவரும் இணைந்து புதிய துறவு இல்லம் ஒன்றை அமைத்தனர். ஐந்து வருடங்கள் கடுந்தவ வாழ்வு வாழ்ந்த னர். மனம்மாறி துறவு வாழ்வு வாழ்ந்த அவரது ........

- தொடர் 24ம் பக். ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01.06.2016 இலிருந்து புதிய நியமனங்கள்

**எமது மறைமாவட்ட ஆயரால் பின்வரும் புதிய நியமனங்கள் 01.06.2016 அன்றுடன் நடைமுறைப்படுத்தப்படுமுகமாக வழங்கப்பட்டுள்ளன.**

- அருட்தந்தை. செற்றிக் யூட் ஒக்கஸ் கல்முனை மறைக்கோட்டத்திற்கான இளைஞர் ஒன்றிய உதவி மறைமாவட்ட இயக்குநர்.
- அருட்தந்தை. இக்னேஸ் ஜோசப் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர்.
- அருட்தந்தை. S. ஜெயநிக்சன் - பெரிய புல்லுமலைப் பங்குத்தளப் பணிகளில் பங்குத் தந்தை அருட்தந்தை. ஜினோ சுலக்சன் அடிகளாருக்கு உதவி.
- அருட்தந்தை. ஜினோ சுலக்சன் ஆயித்தியமலை, பெரிய புல்லுமலை ஆகிய பங்குகளின் நிர்வாகியும், பங்குத்தந்தையும், இளைஞர் ஒன்றிய மறைமாவட்ட இயக்குநருமாவார்.

- புனிதர்களை ....

தந்தை செர்ஜியுஸ், தான் அதற்குத் தகுதியானவர் இல்லை என நினைத்து இல்லத்திலிருந்து வெளியேறிவிட்டார் எனும் செய்தி ரோமுவால்ட்டிற்கு வந்த உடனே தந்தையைச் சந்தித்தார். அவருடன் பேசி, அவரது சந்தேகங்களுக்கு விளக்கம் கூறி மீண்டும் துறவு வாழ்வு வாழ வைத்தார். அதன்பின் 30 வருடங்களாக இத்தாலி நாடு முழுவதும் சுற்றி நற்செய்திப் போதித்துப் பல துறவு இல்லங்களையும் உருவாக்கினார். 1005ம் வருடத்தில் வால் தி கஸ்ட்ரோ எனுமிடத்திற்குச் சென்று ஈராண்டுகள் தங்கியவர். “மறுபடியும் இங்கு வந்து தனிமையில் இறப்பேன்” என முன் மொழிந்துவிட்டு மீண்டும் பயணமானார். அரிசோ மறைமாவட்டத்திற்குச் சென்றிருந்த போது காட்சியில் கமல்தொலி எனுமிடம் குறித்துக் காட்டப்பட்டது. அங்கு சென்று 5 குடிசைகளைக் கொண்ட துறவு இல்லத்தை உருவாக்கினார். அது மிகப் பெரும் வளர்ச்சி கண்டது. 1021ம் வருடத்தில் தனது இறுதிவேளை வந்ததை உணர்ந்து வால் தி கஸ்ட்ரோ சென்று தனி அறையில் செபித்தபடியிருந்து 1027ம் வருடம் ஆனித்திங்கள் 19ம் நாளில் இறையடி சேர்ந்தார். கல்லறைக்கு வந்து மன்றாடிய பலருக்குப் புதுமைகள் நிகழ்ந்தன. 1466ம் வருடம் இவரது திருவுடல் அழியாதிருப்பது கண்டுணரப்பட்டது. 1582ம் வருடம் திருத்தந்தை 13ம் கிரகறி இவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

## திரும்பத் திரும்ப...



வாழ்வில் நமக்குத்தான் எத்தனை
சிக்கல்கள், பிரச்சினைகள்,
கஷ்ட காலங்கள்!
ஒன்றிலிருந்து ஒன்று என
எல்லாமே தொடர்ச்சியாக!
ஒன்றுக்குப் பின்னர் இந்தப் பாடம் போதும்,
இனிமேல் தான் எச்சரிக்கை தேவை
என்றெல்லாம் மனமார தீர்மானங்கள்!
ஒன்றாலும் பயனில்லை..
மீண்டும் அதே கதிதான்!
ஆறுதலாக எண்ணிப் பார்க்கையில்
நம் பிரச்சினைகள் அனைத்திற்கும்
ஏதோ ஒன்று யாரோ ஒருவர்!
மீண்டும் இவர்கள்
நம் வாழ்வில் தலையிடாதிருக்க
ஒன்று மட்டும் நாம் செய்யதல் நன்று?
பிரச்சினைகளின்போது நமக்கு உதவியவர்கள்
பிரச்சினைகளில் நம்மைக் கைவிட்டவர்கள்
பிரச்சினைக்கு நம்மை ஆளாக்கினவர்கள்
இவர்களை மறவாதிருத்தலே நன்று!

**எண்ணிப்பார்க்கையில்...**

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கதை :

ஒரு நாள் ஒரு மனிதன் காட்டு வழியாக மரஞ்செடிகொடிகளின் அழகை இரசித்த வண்ணம் நடந்துகொண்டிருந்தான். அந்த காலைப் பொழுதில் சூரிய ஒளியின் கதிர்கள் பனி மூட்டத்தினூடாக ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருந்தன. குருவிகளின் ஓசை இனிய நாதமாகக் கேட்டது. கடவுளின் படைப்பின் அழகைக் கண்டு மகிழ்ச்சிய டைந்த அவன், மனதுக்குள் கடவுளின் புகழைப் பாடிய வாறே போய்க் கொண்டிருந்தான். அந்தநேரம் அவன் கண்ட காட்சியொன்று அவனைத் தடுத்து நிறுத்தியது. ஒரு மரக்கிளையிலே இலை ஒன்றின் அடிப் பாகத்தில் ஒரு வண்ணத்துப் பூச்சி தனது கூட்டுக்குள் இருந்து வெளியேற முயற்சி செய்து கொண்டிருந்ததையே அவன் கண்டான்.

அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றபோது கூட்டில் ஒரு சிறு துவாரம் ஏற்பட்டது. உடனே அவன் அந்த மரத்தின் கீழ் அமர்ந்து அந்தக் கூட்டிலிருந்து வண்ணத்துப்பூச்சி வெளிவரும் அழகைப் பார்த்துவிடவேண்டும் என்கின்ற ஆவலில் உட்கார்ந்துகொண்டான். பல மணி நேரமாகிவிட்டது, வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தபாடில்லை. ஆனாலும் அது தனது உடலை, ஏற்பட்ட வாரத்தினூடாக வெளியே கொண்டுவரும் முயற்சியை நிறுத்திக் கொண்டதாகவும் காணோம். திடீரென அதன் அசைவுகளும், முயற்சிகளும் நின்றுபோயின. அந்த மனிதனோ 'அவ்வளவுதான் வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை, இனி அது தொடர்ந்து முயலாது' என்ற முடிவுக்கு வந்தான். தனித்து அதனால் எதுவும் பண்ணிவிட முடியாது, நாம்தான் அதற்கு உதவ வேண்டும் என்று எண்ணிக் கொண்ட வனாகத் தோளில் தொங்கிய சிறு பையை எடுத்து அதற்குள்ளிருந்த கூரான மெல்லிய கத்திரிக்கோலை எடுத்தான். மெதுவாகக் கூட்டை நெருங்கியவன், திடீரெனத் தன்னைச் சுற்றியும் பறக்கத் தொடங்கிய வண்ணத்துப் பூச்சிகளைக் கண்டு மலைத்துப் போய்விட்டான். அதிலொரு பெரிய வண்ணத்துப் பூச்சி அவனை நெருங்கி,

"ஐயா, அந்தக் கூட்டில் கை வைக்க வேண்டாம்" என்றது.

அவன் அதைப் பார்த்து,

"ஏன் என்னைத் தடுக்கிறாய்? நான் அதற்கு உதவி செய்யப்போகிறேன். அதனால் கூட்டை உடைத்துக்கொண்டு வெளிவரமுடியவில்லை. அதனால் அது செத்துவிடப்போகிறது" என்று பதிலிறுத்தான்.

# கூட்டுப் புழுவும் வண்ணத்துப் பூச்சியும்

பி. அன்ரூ இராஜேந்திரம்



"ஐயா, நீங்கள் அதற்கு உதவி செய்யாமல் இருந்தாலே அது பெரிய உதவியாகத்தான் இருக்கும்" என்று அவனைத் தடுத்தது அந்தப் பெரியவண்ணத்துப் பூச்சி.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அது வெளியே நிச் சுதந்திரமாக உன்னைப்போல பறந்து திரிவதைப் பார்க்க ஏன் மறுக்கிறாய். உனக்குப் பொறாமை!" என்றான் அவன் கோபந் தலைதூக்க.

"ஐயா, எனக்குப் பொறாமை கிடையாது. நாங்கள் வண்ணத்துப் பூச்சிகள். ஆனாலும் நீங்கள் செய்யும் வேலை அந்தப் பிஞ்சி வண்ணத்துப் பூச்சியை அழித்துவிடக்கூடாதே என்றுதான் உங்களைத் தடுக்கி றேன்" என்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருந்துகிறோம்!

மே மாதத் தொண்டன் இதழில் பிரசுரமான வர்ணந் தீட்டும் போட்டி 107 க்கு உரிய 1ம் வினாவில், 'சாராவுக்கு' என்பதற்குப் பதிலாக 'ரெபேக்கா' என வரவேண்டும். அதேவேளை, திருவிவிலியப் பகுதியின் ஆரம்பப் பகுதியும் பிரசுரமாகவில்லை. தவறுக்காக வருந்துகிறோம்.

- ஆசிரியர் -
தொண்டன்

அந்த மனிதனும் விடுவதாயில்லை.

"நான் உதவி செய்யவில்லை என்றால் அது இறந்துவிடும் என்பது உனக்குத் தெரியவில்லை" என்றான். அதற்கு அந்தவண்ணத்துப் பூச்சி,

"நாங்கள் வளர்ந்து கூட்டை விட்டு வரக் காலம் எடுக்கிறதென்றால் அதற்கு ஒரு காரணம் உண்டு. அதிலே எங்களுக்கு வளர்ச்சி இருக்கிறது. நீங்கள் செய்யப்போகும் வேலை அதன் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் கெடுத்துவிடும். தயவுசெய்து பொறுமை காருங்கள்"

என்று வண்ணத்துப் பூச்சி கெஞ்சியும் அவன் காதுகொடுக்கவில்லை. தான் எண்ணியபடி செய்து முடிப்பதிலேயே குறியாயிருந்தான். இவனிடம் பேசிப் பயன் இல்லை என்று எண்ணிய அந்தப் பெரிய வண்ணத்துப் பூச்சி தனது கூட்டத்தை அழைத்துக் கொண்டு,

"வாருங்கள். நம்மால் இனி ஒன்றும் செய்ய முடியாது. இந்த மனிதன் அடம் பிடிக்கிறான். அந்த வண்ணத்துப்பூச்சி பாவம். அதை நம்மால் இனிக் காப்பாற்ற முடியாது. நமக்கும் ஏதும் தீங்கு விளைய முன்னம் இங்கிருந்து கிளம்பி விடுவோம்" என்று சொல்லிக் கொண்டு அங்கிருந்து அனைத்துமாகக் கிளம்பின.

நிலைமையைப் புரிந்துகொள்ளாத அந்த மனிதனும் தான் எண்ணியிருந்தபடியே செய்ய முற்பட்டு, ஏற்பட்டிருந்த துவாரத்தினூடாகக் கத்திரியைச் செலுத்தி அதை மெதுவாக வெட்டித் திறந்தான். கூட்டுக்குள்ளிருந்த வண்ணத்துப் பூச்சி பூரணமாகவும் சுலபமாகவும் வெளியேறியது. ஆனாலும் அதன் உடல் மெலிதாகவும் நலிவாகவும் இருந்தது. சிறகுகள் விரிய முடியாமல் இருந்தன. அந்த மனிதன் எப்படியோ அதன் சிறகுகள் பலம் பெற்று விரியும், வண்ணத்துப் பூச்சியும் தன் உடலைத் தூக்கிக் கொண்டு பறக்கும் என்று ஆவலுடன் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால், அவனுக்குப் பலத்த ஏமாற்றம்தான் மிஞ்சியது. அந்த வண்ணத்துப் பூச்சியோ தனது மிச்ச நேரத்தைத் தனது சுருங்கிய சிறகுகளை அடித்து தனது நைந்த உடலைத் தூக்கிப் பறக்க முடியாமல் நிலத்தில் ஊர்ந்தபடியே திரிந்தது. அது இனிப் பறக்கப் போவதில்லை! இயற்கை அழகை இரசிக்கத் தெரிந்த அந்த மனிதனுக்கு இயற்கையின் வழிமுறை தெரிந்திருக்கவில்லை. வண்ணத்துப் பூச்சி அந்தக் கூட்டை விட்டு வெளியேற முன்னெடுத்த முயற்சிகள் உடனடியாக விளைவைத் தந்திருக்கப் போவதில்லை, மாறாகப் படிப்படியாக அது தனது சிறகுகளின் பலத்தை அதிகரித்துக்கொண்டு ஏற்பட்ட துவாரத்தினூடாகப் புகுந்து புறப்பட்டு வெளியாகின்ற போது சிறகை அடித்து அழகாகப் பறக்கத் தேவையான வலிமையை அதன் உடல் பெற்றிருந்திருக்கும். இதனால் தொலை தூரம் பறக்கவும் அதனால் இயலுமாக இருந்திருக் கும். அதுதான் கடவுளின் படைப்பின் வளர்ச்சிப் படிமுறை. இது அவனுக்குப் புரிந்திருக்காமற் போனது அந்த வண்ணத்துப் பூச்சியின் கெட்ட காலமே!

சிறுவர்கள் தமக்கும் ஒழுங்கான வளர்ச்சிப் படிமுறை என்பது அவசியம். நாம் வளர்ந்து ஆளாகி விட்டோம் என்பதற்காக நாம் உருவாகி வந்த நமது அனுபவத்தை மறந்து, நமது பிள்ளைகள் உடனடியாக நமது நிலைக்கு வந்துவிடவேண்டும் என்பதற்காக எமது எண்ணங்களை, முடிவுகளை அவர்கள் மீது திணிக்கின்ற போது அவர்களது இயல்பான வளர்ச்சி என்பது பாதிக்கப்படுகின்றது. எம் குழந்தைகளையிட்டு நமக்கு ஆசை அபிலாஷைகள் இருப்பது தவறல்ல. ஆனால், அதை அவர்கள் தமது வளர்ச்சிப் படிமுறையூடாக அடையவேண்டும் என்று பொறுமையோடு நாம் விரும்பும் பிள்ளைகளாக அவர்களை வளர்த்தெடுப்பதுதான் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.06.2016

# திருவிவிலியம் கற்போம் – 156

## நீதித் தலைவர்கள் – 16:03–31

(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. சிம்சோன் நடுச்சாமம் வரை படுத்துக் கிடந்து, நள்ளிரவில் எழுந்து நகர் வாயிலின் கதவுகளையும், இரு கதவு நிலைகளையும் குறுக்குச் சட்டங்களுடன் ..........................தம் தோள்களில் வைத்து எபிரோனுக்கு எதிரிலிருந்த மலைக்குச் சென்றார்.

அ) கழற்றி ஆ) பிடுங்கி இ) உடைத்து

2. சிம்சோன் சோரேக்குப் பள்ளத்தில் வாழ்ந்த தெலீலாவை விரும்பியதால் ..........................சிற்றரசர் அவளிடம் "நீ அவனை மயக்கி, எதில் அவனது வலிமை உள்ளது எனக் கண்டுபிடி. உனக்கு ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு தருவோம்" என்றனர்.

அ) யூதேயா ஆ) இஸ்ரயேல் இ) பெலிஸ்திய

3. தெலீலா சென்று சிம்சோனிடம் இதுபற்றிக் கேட்டபோது, "ஏழு புதிய, உலராத நரம்புக் கயிறுகளால் என்னை அவர்கள் கட்டினால், நான் .......................... இழந்து மற்ற மனிதர்போல் ஆகிவிடுவேன்" என்றார்.

அ) வலிமை ஆ) பலத்தை இ) திறனை

4. சிற்றரசர் அவற்றை அவளிடம் கொடுக்க, அவள் அவரைக் கட்டியபின், ஆள்கள் அறையில் ஒளிந்துகொண்டிருக்க "சிம்சோன்! பெலிஸ்தியர் உம்மீது பாய்கின்றனர்" எனக் கத்தவே நெருப்பில் .......................... அறுவது போன்று கயிறுகளை அறுத்தார்.

அ) சணல்கயிறு ஆ) வடக்கயிறு இ) மூங்கில் தடி

5. தெலீலா சிம்சோனிடம் "என்னிடம் பொய் சொன்னீர். எதனால் கட்டவேண்டும் என்று சொல்லும்" என்று கேட், அவர் "இதுவரை உபயோகிக்கப்படாத ..........................கயிறுகளால் கட்டினால்" என்று கூற அவள் அவ்வாறே செய்தாள்.

அ) சணல் ஆ) புதிய இ) தும்பு

6. இம்முறையும் சிம்சோனை எதுவும் செய்யமுடியாததால் தெலீலா மீண்டும் அவரிடம் கேட்க, "எனது ஏழு மயிர்க்கற்றைகளையும் .......................... நூலால் பின்னினால் போதும்" என்றதும் அவள் அப்படியே செய்து முளை அடித்து மாட்டினாள்.

அ) சணல் ஆ) பருத்தி இ) பாவு

7. சிம்சோனுக்கு எதுவும் நடக்காதுபோய் அவள், ஒவ்வொருநாளும் தொந்தரவு செய்ததால், உயிர் போகுமளவுக்கு வருத்தமுற்று ".......................... என் தலை மழிக்கப்பட்டால் என் ஆற்றல் அழிந்துவிடும்" என்றார்.

அ) கத்திரிக்கோலால் ஆ) சிறிய கத்தியால் இ) சவரக் கத்தியால்

8. தெலீலா பெலீஸ்தியச் சிற்றரசருக்கு ஆளனுப்பியதும் வெள்ளிக் காசுகளுடன் சென்று, அவளது மடியில் தூங்கிய சிம்சோனின் ஏழு மயிர்க் கற்றைகளையும் .......................... அவரது ஆற்றல் அவரிடமிருந்து அகன்றது.

அ) மழிக்க ஆ) வெட்ட இ) கத்திரிக்க

9. சிம்சோன் இதனை உணராமலிருந்தவேளையில் பெலிஸ்தியர் அவர் கண்களைத் தோண்டியெடுத்து, காசாவுக்குக் கொண்டுசென்று .......................... சங்கிலிகளால் கட்டிச் சிறையில் அரைக்கும் வேலைக்கு உட்படுத்தினர்..

அ) இரும்பு ஆ) வெண்கல இ) பித்தளை

10. சிம்சோன் அவர்களின் விழாவில் வேடிக்கை காட்டியபோது தன்னைப் பிடித்திருந்த இளைஞனிடம் "இவ்வீட்டைத் தாங்கும் தூண்களிடம் என்னை .......................... செல்" என்று அவனுடன் சென்று இருதூண்களையும் சாய்த்து அங்கிருந்தோரையும் கொன்று தானுமிறந்தார்.

அ) இட்டு ஆ) அழைத்து இ) கொண்டு

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் – 156

பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. பாராளுமன்ற உணவு என அழைக்கப்படும் நாடு :
   *(சீயம் - ஜப்பான் - பிலிப்பைன்ஸ்)*

2. ஓடும் புகையிரத வண்டியில் முதன் முதல் அச்சகம் அமைத்துப் பத்திரிகை வெளியிட்டவர்:
   (தோமஸ் அல்வா எடிசன் - ஐசக் நியூட்டன் - சாள்ஸ் பபேஜ்)

3. புனித ஜோசப்வாஸ் அடிகள் எட்டு இடங்களில் பகிரங்கமாகத் திருப்பலிகளை நிறைவேற்றிய வருடம்:
   *(1688 - 1589 - 1689)*

4. வாழ்நாள் முழுவதும் எழுதிக்கொண்டேயிருந்த ஒரு எழுத்தாளர் :
   (ஐசக் நியூட்டன் - ஐசக் ஆசிமோவ் - மைக்கல் பரடே)

5. 'யானை படுத்தால் குதிரை ..............................'
   (மட்டம் - பட்டம் - கொட்டம்)

6. வினைப் பகுபதத்திற்குரிய உதாரணம் :
   (தொழிலாளி - ஆடுதல் - ஓடினான்)

பெயர் : ..................................................................................

முகவரி: ..................................................................................

..................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் – 156
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுத்திகதி 30-06-2016

# சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 108



1. யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து கரானை நோக்கிச் செல்லும்வழியில் ஓரிடத்தில் தங்கியபோது என்ன நிகழ்ந்தது?

   விடை: ..................................................................................................

2. யாக்கோபு தூக்கம் தெளிந்து அச்சமடைந்தது ஏன்?

   விடை:..................................................................................................

   ..................................................................................................

3. யாக்கோபு அதிகாலையில் எழுந்து செய்தது என்ன??

   விடை:..................................................................................................

   ..................................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெத்தேலில் யாக்கோபின் கனவு

**(தொடக்கநூல் 28: 10-19)**

யாக்கோபு பெயேர்செபாவிலிருந்து புறப்பட்டு, கரானை நோக்கிச் சென்றான். அவன் ஓரிடத்திற்கு வந்தபோது கதிரவன் மறைந்துவிட்டான். எனவே, அங்கே இரவைக் கழிப்பதற்காக அவ்விடத்தில் கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துத் தலைக்கு வைத்துக்கொணடு, அங்கேயே படுத்துறங்கினான். அப்போது அவன் கண்ட கனவு இதுவே: நிலத்தில் ஊன்றியிருந்த ஓர் ஏணியின் நுனி மேலே வானத்தைத் தொட்டுக் கொண்டு இருந்தது. அதில் கடவுளின் தூதர் ஏறுவதும் இறங்குவதுமாய் இருந்தனர். ஆண்டவர் அதற்குமேல் நின்றுகொண்டு,

“உன் மூதாதையராகிய ஆபிரகாம், ஈசாக்கின் கடவுளாகிய ஆண்டவர் நானே. நீ படுத்திருக்கும் இந்த நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தந்தருள்வேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும். நீ மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்குத் திசைகளில் பரவிச் செல்வாய். உன்னிலும் உன் வழி மரபிலும் மண்ணுலகின் எல்லா இனங்களும் ஆசி பெறுவன. நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பிவரச் செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன்” என்றார்.

யாக்கொபு தூக்கம் தெளிந்து, “உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார்: நானோ இதை அறியாதிருந்தேன்” என்று அச்சமடைந்து, “இந்த இடம் எவ்வளவு அச்சத்திற்குரியது! இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில்” என்றார். பிறகு யாக்கோபு அதிகாலையில் எழுந்து, தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து, நினைவுத் தூணாக அதை நாட்டி, அதன் மேல் எண்ணெய் வார்த்து, ‘லூசு’ என்று வழங்கிய அந்த நகருக்குப் ‘பெத்தேல்’ என்று பெயரிட்டார்.

**(பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்: ..................................................................)**

..........................................

..........................................

..........................................

..........................................

சேரல் :-

**வர்ணம் தீட்டும் போட்டி — இல. 108**

**தொண்டன்**

**அ.பெ. எண் - 44**

**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டி முடிவுகள்...

**திருவிவிலியம் கற்போம் - 154 விடைகள்**

ஆற்றலால், தேனும், பெண், நார்ப்பட்டாடைகளையும், உணவு, அழுது, இனியது, உழுதிராவிடில், ஆட்டுக்குட்டியுடன்

**அறிவை வளர்ப்போம் - 154 விடைகள்**

**1.** மெக்மோகன் **2.** குமரி, நெல்லை **3.** 30

**4.** கிஸ்மிஸ் **5.** கொட்டும் **6.** தொழிற்பெயர்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- S. பிரகீஷன்,
25/7, 1ம் குறுக்கு,
சின்ன ஊறணி, மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்**

- அ. மெர்லின் றெணோரிக்கா,
சாமித்தம்பி வீதி,
தாழங்குடா - 03,
ஆரையம்பதி.

- L. ஜொனத்தன்,
145/22, குவாரி வீதி,
கிருலப்பனை,
கொழும்பு - 06.

- S. தேவதர்ஷனா,
இல.16, பிரதான வீதி,
பெரிய கல்லாறு- 2,
கல்லாறு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 105 முடிவுகள்**

**முதலாம் பரிசு - 400/=**
S. பியென் பெனு,
பழைய கோயில்,
கோயில் வீதி,
இலுப்பைக் குளம்,
நேரியாகுளம்.

**இரண்டாம் பரிசு - 300/=**
டன்ஸ்ரன் டிலுக்ஷினி,
02, இலங்கை மாதா ஆலய வீதி,
இலங்காபுரம்,
தன்னாமுனை.

**மூன்றாம் பரிசு - 200/=**
பி. சதுர்சிகா,
கார்மேல் அருணோதயம்,
அக்கரைப்பற்று.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org